விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27

ஒலி 028 வள்ளுவர் ஆண்டு 2057 தை 02 வெள்ளிக்கிழமை (16.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2026
JANUARY ஜனவரி
23 24 25
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
இன்னும் 7 நாட்களில்
ORGANIZED BY LECS



வேலணை ஐயனார் கோவில் விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற பொங்கல் நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க.

# யாழ்.மக்களின் நம்பிக்கையை வீழ்ச்சியடைய இடமளியேன்

## வேலணையில் ஜனாதிபதி அநுர



(யாழ்ப்பாணம்)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீது யாழ்.மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை சிறிதளவேனும் வீழ்ச்சியடைய இடமளிக்காது இனவாதமற்ற தேசிய ஒற்றுமைமிக்க நாட்டை உருவாக்க தாம் உறுதியளிப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.


(02ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் 50 மெகாவாட் காற்றாலைத் திட்டம்

ஜனாதிபதி அநுர அடிக்கல்

15ஆம் பக்கம் பார்க்க

## வல்வை பட்டத் திருவிழா



(யாழ்ப்பாணம்)

வல்வை உதயசூரியன் கழகமும் வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்த விநோத தொழில்நுட்ப பட்டத் திருவிழா நேற்று வல்வெட்டித்

15ஆம் பக்கம் பார்க்க

### தைப்பொங்கல் தினத்தில் சோகம்

## நாவற்குழியில் டிப்பர் விபத்து; இரு இளைஞர்கள் உயிரிழப்பு







(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி நாவற்குழி ஏ32 வீதியில் டிப்பர் வாகனமொன்று வீதியை விட்டு விலகி

15ஆம் பக்கம் பார்க்க

# போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(கொழும்பு)

சர்வதேச சட்டத்தின் பிரகாரம் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டோரைத் தண்டிக்க வேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள்

15ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரிடரால் பாதிக்கப்பட்ட

## 22 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ. 800 மில்லியன் இழப்பீடு வழங்கப்பட்டது

டித்வா பேரிடரால் ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்காக இதுவரை இழப்பீடாக மொத்தம் 800 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டு முடிந்துள்ளதாக விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த விவசாயப் பணிப்பாளர் நாயகம் துஷார விக்ரமாராச்சி, நாடு முழுவதும் உள்ள சுமார் 22,000 விவசாயிகளுக்கு இந்த இழப்பீட்டுத் தொகைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாதிப்பு விபரங்களின்படி, காய்கறிச் செய்கையில் ஏற்பட்ட சேதங்களுக்காக 18,200 விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 660 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக உணவுப் பயிர்ச் செய்கையில் பாதிக்கப்பட்ட 2,800 விவசாயிகளுக்கு 110 மில்லியன் ரூபாயும் சோளச் செய்கையில் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக 1000 விவசாயிகளுக்கு 35 மில்லியன் ரூபாயும் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தத்தினால் வாழ்வாதாரத்தை இழந்த விவசாயிகளுக்கு உதவும் நோக்கில் இந்த நிதியுதவிகள் அனைத்தும் தற்போது வழங்கி முடிக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

## கைதானவர்களின் தண்டனையை தளர்த்துவது தொடர்பில் ஆராய்வு

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாக தண்டனை அனுபவிப்போரின் தண்டனையை தளர்த்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் இந்த விடயம் தொடர்பான பரிசீலனைக்குக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாக தண்டனையை அனுபவிப்போர் தொடர்பில் குறித்த குழு ஆராய்ந்து வருவதாகவும் இந்தக் குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் பொருந்தும் வகையிலேயே இந்த விடயங்கள் ஆராயப்படுகின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மாத்திரமே கைதுகள் இடம்பெற்றுள்ளதால் அது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார். (ம-7)

## சிறையில் கஸ்ஸப தேரர் பட்டினிப் போராட்டம்

திருகோணமலை கோட்டைக் கடற்கரையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வனவாசி பலாங்கொட கஸ்ஸப தேரர் நேற்றுக் காலை முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புத்தர் சிலை வைக்கப்பட்டபோது ஏற்பட்ட மோதல் மற்றும் அமைதியின்மை தொடர்பாக நீதிமன்ற உத்தரவின் பேரில் தேரர் கைது செய்யப்பட்ட அவர் திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழ். மக்களின்...

யாழ்ப்பாணம், வேலணை, ஐயனார் கோவில் விளையாட்டு மைதானத்தில் நேற்று (15) பிற்பகல் நடைபெற்ற வட மாகாண தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்நாட்டு வரலாற்றில் இனவாதத்தை ஊக்குவிக்கும் இயக்கங்கள் பலவீனமடைந்த மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்காக போராடிய ஒரு ஆண்டாக கடந்த ஆண்டு பதிவாகிறது.

எந்த மொழியைப் பேசினாலும் எந்த மதத்தைப் பின்பற்றினாலும் அனைத்துப் பிரஜைகளும் கௌரவத்துடன் வாழக்கூடிய இனவாதமற்ற, தேசிய ஒருமைப்பாடு நிறைந்த வளமான நாட்டைக் கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கம் என ஜனாதிபதி அநுர குறிப்பிட்டார்.

மேலும் "தமிழ் மக்களின் முக்கியமானதொரு கலாசார தினமாக தைப்பொங்கல் தினத்தில் நீங்கள் உற்சவத்தை கொண்டாடும் நிலையில் எனக்கும் உங்களுடன் இணைவதற்கு வாய்ப்புக் கிடைத்தமையை பாக்கியமாகக் கருதுகிறேன். அதே போன்று இந்து மக்களின் கலாசாரத்திற்கு அமைய இன்றுதான் புத்தாண்டு பிறக்கிறது. புத்தாண்டு பிறப்பதோடு புதிய பிரார்த்தனைகள், எதிர்பார்ப்புகள் உருவாகிறது. குறிப்பாக மக்கள் என்றவகையில் உங்களுக்கு பாரிய எதிர்பார்ப்புகள் இருக்கும். அதேபோன்று நாடென்ற வகையில் எமக்கு புதிய எதிர்பார்ப்புகள் உள்ளன.

தற்பொழுது இருப்பதை விட சகல வகையிலும் வளமான செழிப்பான நாட்டை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும். நாம் வளமான நாடு என்று எதனைக் குறிப்பிடுகிறோம்.

பணம் மற்றும் கட்டுமானங்களின் ஊடாக வளம் பெற்ற நாட்டையா அவ்வாறு சொல்கிறோம். அதனை விட அதிகளவான துறைகளில் வளமான நாட்டை உருவாக்க வேண்டும். நாம் ஆட்சியை ஏற்று ஒரு வருடத்தை விட சற்று அதிக காலம் சென்றுள்ளது.

வரலாற்றில் மிகக் குறைவான இனவாத மோதல்கள் நடந்த இனவாதத்தை ஊக்குவிக்கும் இயக்கங்கள் பலவீனமடைந்த தேசிய ஒற்றுமைக்காக போராடிய வருடம் இது.

ஏனைய காலங்களில் பல்வேறு இடங்களில் இனவாத மோதல்கள் மற்றும் இனவாதபோக்குகள் இடம்பெற்றன. இனவாதமற்ற தேசிய ஒற்றுமை நிறைந்த வளமான நாடே எமக்குத் தேவை. எங்கு பிறந்தாலும் எந்த மொழி பேசினாலும் எந்த மதத்தை பின்பற்றினாலும் எத்தகைய கலாசாரச் சூழலில் வாழ்ந்தாலும் அனைவருக்கும் எமது நாட்டில் கௌரவமான பிரஜையாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதே எமது அபிலாசையாகும்.

இனவாதமற்ற வளமான நாடே எமக்குத் தேவை. எம்மிடையே வேறுபட்ட கலாசாரங்கள் இருக்கின்றன. ஒரு நாடு எவ்வாறு அழகாகும்? மக்கள் மத்தியில் எவ்வாறு நம்பிக்கை கட்டியெழுப்பப்படும்? இந்த அனைத்து கலாசாரங்களினதும் கௌரவம், மதிப்பு மற்றும் அங்கீகாரம் என்பன மிக முக்கியமானது. நாம் அத்தகைய நாட்டை உருவாக்க வேண்டும். அது தான் எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

பொருளாதார ரீதியில் பெரும் அழுத்தத்தை எதிர்கொள்ளும் மக்களுக்கு இருப்பதை விட சிறந்த வாழ்க்கை நிலையை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக சிறந்த வீட்டை வழங்குவது சிறந்த கல்வியை வழங்குவது ஆரோக்கியமான வாழ்விற்காக சிறந்த சுகாதார சேவையை ஸ்தாபிப்பது விவசாயம், மீன்பிடித்துறை என்பவற்றை முன்னேற்றி சிறந்த வருமான வழியை அமைத்துக் கொடுப்பது இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பது போன்றவை அரசாங்கம் என்ற வகையில் எமக்குள்ள எதிர்பார்ப்புகளாகும்.

இங்கிருக்கும் அநேகமானோர் கடந்த பொதுத் தேர்தலில் எம்மீது நம்பிக்கை வைத்து யாழ். மாவட்டத்தை முதன்முறையாக வெற்றி கொள்ள பங்களித்தவர்களாகும்.

நீங்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளீர்கள். நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். நீங்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை சிறிதளவாவது வீழ்ச்சியடைய இடமளிக்காது இனவாத மற்ற தேசிய ஒற்றுமை மிக்க நாட்டை உருவாக்குவோம்.

உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். அனைவருக்கும் மகிழ்ச்சியோடும் நிம்மதியோடும் வாழும் நாட்டை நாம் உருவாக்குவோம். இங்கு திரண்டுள்ள மக்களின் பிரதான எதிர்பார்ப்பு அதுதான் என்பதை நாம் அறிவோம்.

மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக நாம் தயக்கமின்றி எமது பொறுப்பை நிறைவேற்றுவோம். இந்த தைப்பொங்கல் தினத்தில் ஒரு பிரார்த்தனை செய்வோம். நாம் பிரியாதிருப்போம். நாம் ஒன்றுபடுவோம். சிறந்த நாட்டை எமது மக்களுக்காக உருவாக்குவோம். அனைவரும் திட உறுதியுடன் முன்வர வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன் என்றும் தெரிவித்தார். (ம-7)


கண்ணீர் அஞ்சலி



சின்னமணி சந்திரசேகரம்

(சாந்தி அண்ணன் சவுந்தரராஜன்)

வல்வெட்டி மண்ணில் தோற்றம் 26.02.1940

கனடா மண்ணில் மறைவு 11.01.2026

உறவுகட்கு, ஊரவர்க்கு வாழ்வாங்கு வாழ்ந்த மனிதன் நீ சாந்தி அண்ணன் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போம்.

நண்பர்கள் சார்பில்

சந்நிதியான் திருமண சேவை

சந்நிதியான் Real Easte

(C-4822)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய சேவைக்கு 23 ஆயிரம்
# பட்டதாரிகள் நியமனம்


**(கொழும்பு)**

**நாட்டில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 23 ஆயிரத்து 344 பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு உடனடியாக இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.**

ஆசிரியர் சேவைக்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்காக இரண்டு வெவ்வேறு போட்டிப் பரீட்சைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் முதலாவது பரீட்சை தற்போது அரச சேவையில் பணியாற்றும் பட்டதாரிகளுக்காக மட்டும் நடத்தப்படும் என்றும் இரண்டாவது பரீட்சை நாட்டில் உள்ள ஏனைய அனைத்து பட்டதாரிகளுக்கும் பொதுவானதாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு பரீட்சைகளிலும் பட்டதாரிகள் பெறும் பெறுபேறுகளின் அடிப்படையில், அதிக புள்ளிகளைப் பெற்ற தகுதியானவர்கள் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

## சூட்கேசில் கஞ்சா கடத்திய இளைஞர்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பயணப் பொதிக்குள் கேரளா கஞ்சாவைக் கடத்தி செல்ல முற்பட்ட இளைஞர்களை பொலிஸார் கைது செய்ய முற்பட்டவேளை இளைஞர்கள் தப்பியோடியுள்ளனர்.

வடமராட்சி திக்கம் பகுதியில் இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் கேரளா கஞ்சாவை கடத்திச் செல்வதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களைப் பொலிஸார் வழிமறித்துள்ளனர்.

அதனை அடுத்து இளைஞர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளையும் தாம் எடுத்துச் சென்ற பயணப் பொதியையும் (சூட்கேஸ்) கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கைவிட்டுச் சென்ற பயணப் பொதியை பொலிஸார் சோதனை செய்த போது, அதனுள் ஆடைகளின் கீழ் பொதி செய்யப்பட்ட நிலையில் சுமார் 12 கிலோ கஞ்சாவைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சா மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றுள்ள பொலிஸார் தப்பிச் சென்ற இருவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)


## இளையோர் புத்தக அரங்க கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் அறிவாலயத்துடன் மக்கள் கலை இலக்கியப் பேரவை இணைந்து நடத்தும் இளையோர் புத்தக அரங்கக் கொண்டாட்டம் எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் இணுவில் அறிவாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மாபெரும் சிறுவர் நூற் கண்காட்சியும் மலிவு விற்பனையும் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரையும் இடம்பெறவுள்ளது.

முற்றிலும் இலவசமாக இடம்பெறும் இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்புவிடுத்துள்ளனர். (8)



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பொங்கல் நிகழ்வு நேற்றைய தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. பொங்கல் நிகழ்வைத் தொடர்ந்து வசந்தமண்டப பூஜை இடம்பெற்று சுவாமி உள்வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (படம்:- சிவசாந்தன்)

## அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தினால் பாரிய வருமானத்தை ஈட்டிய அரசு

(கொழும்பு)

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் 2025 ஆம் ஆண்டில் வருமான வரி மற்றும் திறைசேரி வரிகள் மூலம் அரசாங்கத்திற்கு 1.118 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 173 சதவீத பாரிய வளர்ச்சியாகும். இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ள விபரங்களின்படி, சொந்த வருமான மார்க்கங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் 26 சத வீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

அத்தோடு, நாடு தழுவிய ஓசுசல மருந்தக வலையமைப்பின் வருமானம் 9 சதவீதத்தால் உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அரச மருந்தக கூட்டுத்தாபன வரலாற்றில் முதல்முறையாக, சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவிற்கான நிதி ஒதுக்கீடுகள் அனைத்தையும் பயன்படுத்தி, மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான "இன்டெண்ட்" கட்டளைகளை முழுமையாக வழங்கியுள்ளது.

கிரிபத்கொட, நாரஹேன்பிட்டிய, கேகாலை, கல்முனை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் ஐந்து புதிய ஓசுசல கிளைகள் திறக்கப்பட்டமை வருமான அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதுடன், வினைத்திறனான நிர்வாகத்தினால் நஷ்டத்தில் இயங்கிய பல கிளைகள் மீண்டும் இலாபமீட்டும் நிலைக்கு வந்துள்ளதாகவும் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-8)

## நாவல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இராஜினிதேவி சிவலிங்கத்தின் "மழைக்கால மேகம்" எனும் நாவல் வெளியீட்டு விழா நிகழ்வானது நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் 11.30 மணிவரை திருநெல்வேலி ராஜா கீறிம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆசிரியர் ஜீவநதி க.பரணீதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திருமதி பிறேமினி பொன்னம்பலம் கலந்து கொள்ளவுள்ளார். தொடர்ந்து நிகழ்வில் வரவேற்புரையினை யாழ். பல்கலைக்கழக நடனத்துறை, முதுநிலை விரிவுரையாளர் திருமதி சத்தியப்பிரியா கஜேந்திரன், வெளியீட்டு உரை யினை தாட்சாயினி, கருத்து ரையினை எழுத்தாளர் சி.ரமேஸ் மற்றும் ஊடகவியலாளர் செல்வி சர்மிளா வினோதினி ஆகியோரும் ஏற்புரை, நன்றியுரையினை திருமதி இராஜினிதேவி சிவ லிங்கம் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (3)

# சக்தி வாய்ந்த கடவுச்சீட்டு தரவரிசை இலங்கைக்கு 93 ஆவது இடம்

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டில் உலகின் சக்திவாய்ந்த கடவுச்சீட்டு 101 நாடுகளின் பட்டியலில் இலங்கை 93 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

குறித்த தரவரிசைப் பட்டியலை ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில் வெளியிட்டுள்ளது.

ஹென்லி பாஸ்போர்ட் குறியீடானது நாடுகளின் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் விசா இல்லாமல் பயணிக்கக் கூடிய இடங்களின் எண்ணிக்கையின்படி தரவரிசைப்படுத்துகிறது.

சிங்கப்பூர் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.

சிங்கப்பூர் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் 192 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும்.


ஜப்பான் மற்றும் தென் கொரியா இரண்டாவது இடத்தில் உள்ளன. அதே நேரத்தில் டென்மார்க் மற்றும் லக்சம்பர்க் முறையே மூன்றாவது இடத்தில் உள்ளன.

இந்த இரு நாட்டு கடவுச்சீட்டில் 188 மற்றும் 186 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்கலாம்.

இதில் ஆப்கானிஸ்தான் 101 ஆவது இடமான கடைசி இடத்தில் உள்ளது. இந்த கடவுச்சீட்டில் 24 நாடுகளுக்கு மட்டுமே விசா இல்லாமல் பயணிக்க முடியும்.

ஹென்லி பாஸ்போர்ட் குறியீட்டின்படி, இலங்கை கடந்த ஆண்டு 44 நாடுகளுக்கான விசா இல்லாத அனுமதியுடன் 96 ஆவது இடத்தில் இருந்தது.


நேபாளம், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் போன்ற பிற சார்க் நாடுகளை விட இலங்கை கடவுச்சீட்டு இன்னும் உயர்ந்த இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது ஒரு நாள் தொடர் நியூசிலாந்திடம் வீழ்ந்த இந்தியா!

**இந்தியாவிற்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுத் தொடரை 1-1 என சமப்படுத்தியுள்ளது.**




இந்தியா-நியூசிலாந்து இடையிலான 2 ஆவது ஒரு நாள் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் உள்ள நிரஞ்சன் ஷா ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது. இதன்படி இந்திய அணி துடுப்பாட்டம் செய்தது.

இந் நிலையில் தொடக்க வீரர்களாக ரோகித் சர்மா, கில் களமிறங்கினர். தொடக்கத்தில் ரோகித் சர்மா 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த விராட் கோலி 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுபுறம் கில் நிலைத்து ஆடினார். அவர் அரைசதமடித்து 56 ஓட்டங்களில் வெளியேறினார். பின்னர் வந்த கே.எல் ராகுல் அதிரடியாக விளையாடினார். பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர் அரைசதம் கடந்தார். அரை சதம் கடந்த பிறகு பந்துகளை பவுண்டரிக்கு விரட்டிய கே.எல் ராகுல் சதமடித்து அசத்தினார். இறுதியில் 50 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 7 விக்கெட் இழப்பிற்கு 284 ஓட்டங்கள் எடுத்தது. கேஎல் ராகுல் 112 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து அணியில் கிறிஸ் டன் கிளார்க் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து 285 ஓட்டங்கள் இலக்குடன் நியூசிலாந்து அணி களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கிய டெவான் கான்வே 16 ஓட்டங்களிலும், ஹென்றி நிக்கோல்ஸ் 10 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த வில் யங்-டேரில் மிட்செலுடன் ஜோடி இந்திய அணியின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தது. அதிரடியாக விளையாடி அரைசதம் கடந்த வில்யங், 87 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் டேரில் மிட்செல் சதம் விளாசி அசத்தினார். டேரில் மிட்செல் 131 ஓட்டங்கள் குவித்தார். இறுதியில் நியூசிலாந்து அணி 47.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்கள் குவித்து அபார வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் இந்தியா-நியூசிலாந்து தொடர் தற்போது 1-1 என்ற கணக்கில் சமனில் உள்ளது. (3)

## பங்களாதேஷ் கிரிக்கெட் சபை பணிப்பாளரை பதவி விலகக்கோரி போர்க்கொடி!



பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் பணிப்பாளர் எம்.நஸ்முல் இஸ்லாம் வீரர்களை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டதாகக் கூறி, அவருக்கு எதிராகப் பங்களாதேஷ் கிரிக்கெட் நலன்புரிச் சங்கம் போர்க்கொடி தூக்கியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஊடக சந்திப்பொன்றின் போது நஸ்முல் இஸ்லாம் வெளியிட்ட கருத்துக்கள் வீரர்களைக் கொதிப்படையச் செய்துள்ளன.

பங்களாதேஷின் முன்னாள் கப்டன் தமிம் இக்பாலை "இந்திய முகவர்" என அவர் சாடியுள்ளார்.

சிரேஷ்ட வீரர்களின் விசுவாசம் மற்றும் நோக்கங்கள் குறித்து அவர் கேள்வி எழுப்பியதுடன், நிதி மற்றும் தெரிவுக் குழு விவகாரங்களில் வீரர்கள் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பதாகக் குற்றம் சுமத்தினார்.

இந்த கருத்துக்களுக்கு எதிரப்புத் தெரிவித்து பங்களாதேஷ் கிரிக்கெட் நலன்புரிச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில், நஸ்முல் இஸ்லாமின் கருத்துக்கள் வீரர்களின் கண்ணியத்தைக் குறைப்பதாகவும், அவர்களின் நேர்மையைப் பகிரங்கமாகத் தாக்குவதாகவும் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

அவர் உடனடியாகப் பதவி விலகாவிட்டால், உள்நாட்டு மற்றும் சர்வதேசப் போட்டிகள் அனைத்தையும் புறக்கணிக்கப் போவதாக வீரர்கள் எச்சரித்துள்ளனர். தற்போது நடைபெற்று வரும் பங்களாதேஷ் பிரீமியர் லீக் போட்டிகளைப் புறக்கணிக்கவும் வீரர்கள் தயாராக உள்ளதால், தொடர் பாதியில் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடளாவிய ரீதியில்

# வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ள மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**இலவச சுகாதார சேவை மற்றும் மருத்துவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைப்பதற்கான இணக்கப்பாடுகளை, நடைமுறைப்படுத்துவதற்கு தவறினால், நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

நாட்டின் சுகாதார சேவை மற்றும் மருத்துவர்களின் உண்மையான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வுகாண்பதற்கான எந்தவொரு குறுகிய கால மற்றும் நீண்டகாலக் கொள்கைகளும், 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் உள்ளடக்கப்படவில்லை என அந்த சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதன் காரணமாக சுகாதாரத்துறையினர் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சுகாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகோரி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்த பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தொடர்ந்து, சுகாதார அமைச்சரால் வழங்கப்பட்ட எழுத்து மூல இணக்கப்பாடுகளின் அடிப்படையில் குறித்த போராட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

இதனிடையே, அண்மையில் இடம்பெற்ற அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் மருத்துவ சங்கத்தினரின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த நிலையில், ஏற்கனவே வழங்கப்பட்ட இணக்கப்பாடுகளை நிறைவேற்றி பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைப்பதற்கு சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சுக்கு மேலும் 10 நாட்கள் கால அவகாசத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதிக்குள் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கத் தவறினால், எதிர்வரும் 23ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு நிறைவேற்றுக் குழுவினால் ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (8)

# இலங்கைக்கான உதவிகளை தொடர்ந்து வழங்குவோம்

## இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா



(கொழும்பு)

இலங்கைக்கான மனிதாபிமான உதவிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 450 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி திட்டத்தின் கீழ், குறித்த மனிதாபிமான திட்டங்கள் மேலும் வலுப்பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமை நேற்று சந்தித்த போது அவர் இந்த விடயங்களை கூறியுள்ளார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

டித்வா பேரிடரின் போது இந்தியா வழங்கிய உதவிகளுக்கு ரவூப் ஹக்கீம் நன்றி தெரிவித்ததாகவும் அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (8)

# இ.போ.ச.பேருந்து விபத்து!

(கொழும்பு)

பொலனறுவை, திம்புலாகல பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து தெஹியத்தகண்டிய நோக்கிப் பயணித்த இ.போ.ச பேருந்து ஒன்று வீதியில் நின்ற காட்டு யானை மீது மோதுவதை தவிர்க்க முயன்ற போது வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது பேருந்தின் சாரதியும் நடத்துனரும் மாத்திரமே இருந்துள்ளதாகவும் உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8)

# 2026 இன் முதல் சந்திர கிரகணம் மார்ச்சில்!



2026 ஆம் ஆண்டின் முதல் சந்திரகிரகண நிகழ்வு மார்ச் மாதம் நிகழவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்த கிரகணத்தின்போது சந்திரன் 82 நிமிடங்கள் இரத்த சிவப்பு நிறத்தில் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வானியல் தரவுகளின்படி, மார்ச் நிகழ்வில் இந்த முழுமை நிலை சுமார் 58 நிமிடங்கள் மற்றும் 19 வினாடிகள் நீடிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இருப்பினும், வளிமண்டல நிலைமைகளைப் பொறுத்து, நிலவு சிவப்பு நிறத்தில் தோன்றும் அந்த நிலை சுமார் 82 நிமிடங்கள் வரை நீடிப்பது போன்ற உணர்வைத் தரக்கூடும் என சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கிழக்காசியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பசிபிக் பெருங்கடல் பகுதிகள் மற்றும் வட மற்றும் தென் அமெரிக்காவின் சில பகுதிகளில் இந்த கிரகணத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ காண முடியும் என்றும், ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்கள், அந்தந்த ஊர் உள்ளூர் நேரத்தைப் பொறுத்தும், வானில் நிலவு இருக்கும் நிலையைப் பொறுத்தும் இந்த கிரகணத்தை ஓரளவிற்கு பார்க்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


முழு கிரகணம் கிழக்கு ஆசியா மற்றும் அவுஸ்திரேலியாவில் மார்ச் 3 அன்று இரவு நேரத்தில் இந்த கிரகணம் தெரியும்.

வட அமெரிக்காவில் மார்ச் 3 அன்று அதிகாலையில் இது நிகழும்.

இலங்கை நேரப்படி இந்த நிகழ்வு மார்ச் 3 அன்று மாலை சுமார் 02:14 மணிக்கு தொடங்கி இரவு 07:53 மணி வரை நீடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (3)

## இலங்கைக் கடலில் தீ பிடித்த எக்ஸ்-பிரஸ்

# 7 பேருக்கு பயணத் தடை



(கொழும்பு)

இலங்கை கடலில் தீப்பிடித்த எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பலுடன் தொடர்புடைய உள்ளூர் கப்பல் நிறுவனத்தின் ஏழு பிரதிநிதிகளுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கப்பலின் மின்னஞ்சல் அமைப்பு நீக்கப்பட்டதாகவும், ஆபத்து இல்லை என்ற கூற்றுக்கள் இருந்தபோதிலும் கப்பலுக்கு நுழைவு அனுமதி வழங்க ஹார்பர் மாஸ்டரை தவறாக வழிநடத்தியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்து, நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள் ளார்.

இந்த வழக்கு தொடர்பான அதிகாரிகள் மட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக, சட்ட மாஅதிபர் சார்பில் முன்னிலையாகிய பிரதி மன்றாடியார் நாயகம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எதிர்கால சட்ட நடவடிக்கைகள் தொடர்பில், கலந்துரையாடப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த நீதிவான், வழக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (8)





**நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தைத்திருநாள் பொங்கல் நிகழ்வு நேற்றைய தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறையில் லஞ்சீற் பாவனைக்குத் தடை

## வாழையிலைப் பாவனைக்கு ஊக்குவிப்பு

(அராலி)

**ஊர்காவற்றுறை பிரதேச சபை ஆளுகைக்குள் பொலித்தீன், லஞ்சீற் பாவனை அவதானிக்கப்படும் பட்சத்தில் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் அ.அன்னராசா எச்சரித்துள்ளார்.**

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோரது இணைந்த ஊடக சந்திப்பு அண்மையில் பிரதேச சபையில் நடைபெற்றது.

இதன்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலித்தீன் பாவனை காரணமாக பல்வேறுபட்ட நோய்கள் ஏற்பட்டு தினமும் ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கின்றனர். பொலித்தீன் பாவனை மூலம் எமது சுற்றுச்சூழல் மாசடைகிறது.

பொலித்தீன் பைகள் பாவனைக்குப் பதிலாக துணியினாலான பைகளைப் பயன்படுத்துவதன்மூலம் அதனை கட்டுப்படுத்த முடியும். உணவகங்களில் லஞ்சீற்றினை தவிர்த்து வாழையிலை, சுடுநீரில் சுத்தம் செய்த பீங்கான்கள் போன்றவற்றை பயன்படுத்தி உணவுகளைப் பரிமாற முடியும்.

மேலும், ஊர்காவற்றுறை பகுதியில் வசித்தவர்கள் தற்போது ஊர்காவற்றுறையை விட்டு வெளியேறி யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் புலம்பெயர் தேசங்களில் வசிக்கின்றனர்.

இதனால் இங்கே உள்ள அவர்களது காணிகள், வீடுகள் பராமரிப்பற்ற நிலையில் பற்றைக் காடாக காணப்படுகின்றது. எனவே அவற்றினை சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுங்கள்.

எனவே காணி, வீடுகளுக்கு உரிமையாளர்கள் அவற்றினைச் சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் நாங்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயாராகி வருகின்றோம் என்றார். (8-104)



இலங்கை புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த 24/12/2025 அன்று அலரி மாளிகையில் நடைபெற்ற "அரச உத்தியோகத்தர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி- 2025" இற்கான விருது வழங்கும் விழாவில் சிறுகதை ஆக்கத்திற்கான முதற்பரிசினை "அவள் தாயாகிறாள்" சிறுகதைக்காக வடமாகாண காணி திணைக்கள உதவிக்காணி ஆணையாளர் திருமதி. சுபாஷ்கரன் சிவப்பிரியா (இலங்கை நிர்வாக சேவை) பெற்றுக் கொண்டார்.

## இரத்ததான முகாம்

(கரணவாய்)

வல்வெட்டித்துறை இரத்ததானசங்கம் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் 84 ஆவது இரத்ததான நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இவ் இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருதிக் கொடை வழங்க விரும்புவோர் 077 991 1131 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்பதிவுகளை மேற்கொள்ளலாம் என வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கத் தலைவர் பா. வீரசுரேந்திரன் தெரிவித்துள்ளார். (8-60)

## ஏலவிற்பனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மண்வெட்டி, சவள், கதிரை, செப்புக்கம்பி, கோடாலி போன்ற 45 வகையான பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# 'கிட்டு ஒரு தனிமனித வரலாறு' ஆவணக் காட்சியகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வங்கக்கடலில் காவியமான தளபதி கிட்டு உட்பட 10 வீரர்களின் 33 ஆவது நினைவேந்தல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்திருக்கும் கிட்டுப் பூங்காவில் நடைபெறும்.

இந் நினைவேந்தல் நிகழ்வில் சிறப்பம்சமாக நல்லூர் தியாக தீபம் திலீபன் ஆவணக் காப்பகத்தினால் உருவாக்கப்பட்ட "கிட்டு ஒரு தனி மனித வரலாறு" என்னும் தொனிப்பொருளுடன் தளபதி கிட்டுவின் வாழ்வியல் தொடர்பான ஆவணக் காட்சியகமும் திறந்து வைக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8-33)




பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியின் 2024 (2026) ஆம் ஆண்டுக்கான ஆண்டு பரிசளிப்பு மற்றும் கல்லூரி தின விழா, HCPPA அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை கல்லூரி கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 400 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 900 | 800 | 1000 |
| தக்காளி | 600 | 600 | 700 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 200 | 250 | 200 |
| கோவா | 300 | 250 | 300 | 400 |
| கரட் | 450 | 450 | 600 | 500 |
| பூசணி | 150 | 120 | 150 | 150 |
| புடோல் | 300 | 350 | 200 | 400 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 800 | 700 | 400 | 1000 |
| வெண்டக்காய் | 400 | 300 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 250 | 350 |
| பயற்றங்காய் | 600 | 800 | 400 | 800 |
| லீக்ஸ் | 400 | 450 | 500 | 600 |
| பீற்றூட் | 600 | 800 | 1000 | 800 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- |
| போஞ்சி | 600 | 500 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | 400 | 400 |
| கீரை – 1 பிடி | 100 | 80-160 | 150 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 200 | 150 | 100-150 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 800 | 450 | 500 | 600 |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 |
| ஈரப்பலா | 150 | 200 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அறுவைச் சிகிச்சை; இளம் வயதினரிடையே அதிகரிப்பு

## இலங்கை அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் சங்கம்

**(கொழும்பு) ---------- இதய அறுவை சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

விசேட அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் நாலக திசாநாயக்க, ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சிகிச்சை பெறுபவர்களில் கணிசமானோர் இளம் வயதினர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகளவில் நடுத்தர வயதுக்குட்பட்டோரில் ஏற்படும் இறப்புகளில் பெரும்பாலானவை மாரடைப்பால் ஏற்படுவதாக மருத்துவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக 60 முதல் 70 வயதுக்கு இடைப்பட்டவர்கள், இதய அறுவை சிகிச்சை பெற்றுவந்த நிலையில், தற்போது 25 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் சிகிச்சை பெறுவதை அவதானிக்க முடிவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், இதய நோயை கட்டுப்படுத்துவதற்கு உடற்பயிற்சி, உரிய உணவு முறை, மன அழுத்த முகாமைத்துவம் மற்றும் இரத்தக் கொழுப்பைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை மிக அவசியம் எனவும் விசேட அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் நாலக திசாநாயக்க தெரிவித்துள்ளார். (8)

# டிப்பர்- மோட்டார்சைக்கிள் விபத்து - ஒருவர் பலி



(கொழும்பு)

தங்காலை - மகாவெல வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் மற்றும் டிப்பர் வாகனம் என்பன ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8)

# பெண் அரச ஊழியர்களுக்கு வீட்டில் இருந்து வேலை

(கொழும்பு)

இலங்கையில் பெண் அரச ஊழியர்கள் வீட்டிலிருந்தே பணியாற்றுவதற்கு அனுமதிக்கும் புதிய முன்மொழிவு குறித்து மகளிர் விவகார அமைச்சு தற்போது தீவிரமாக ஆலோசித்து வருகிறது.


இது குறித்து கருத்துத் தெரிவித்த மகளிர் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்சன இந்த யோசனையை "திறமையான மற்றும் மிகவும் அவசியமான ஒன்று" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பெண்களை அதிகளவில் வேலைவாய்ப்புச் சந்தையில் இணைத்துக்கொள்ள முறையான திட்டங்கள் நாட்டுக்குத் தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சரவை மட்டத்தில் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார். (8)

# இராட்சத முதலை மீட்பு



(கொழும்பு)

மட்டக்களப்பு, காத்தான்குடி வாவிப் பாதையில் 12 அடி நீளமான இராட்சத முதலை யொன்று நேற்று வியாழக் கிழமை இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

கடந்த மாத இறுதியில் இந்த வாவியில் முதலாவது முதலை இறந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து மற்றுமொரு முதலையும் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட முதலை சுமார் 12 அடி நீளம் கொண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (8)

# பொல்லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

(கொழும்பு)

கண்டியில் பொல்லால் தாக் கப்பட்டு கொடூரமாக ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. நாவலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடையவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலைசெய்யப்பட்டவருக்கும் 34 வயதுடைய சந்தேக நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)

# உண்மைக்குப் புறம்பான செய்திகளை நம்ப வேண்டாம்

## இஸ்ரேலிலுள்ள இலங்கையர்களுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அதிகரித்துவரும் பதற்ற நிலையைக் கருத்திற்கொண்டு, இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு, இலங்கைத் தூதரகம் ஆலோசனை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு குறித்து தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என தூதரகம் குறிப்பிட்டுள்ளது. சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய சில குழுக்களால் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பகிரப்படுகின்றன.

எந்தவொரு சூழ்நிலையையும் கட்டுப்படுத்துவதற்கு இஸ்ரேலிய இராணுவம் தேவையான நடவடிக்கை எடுக்கும் எனவும் இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

ஏதேனும் ஒரு வகையில் அவசர ஏவுகணைத் தாக்குதல் அல்லது தீவிரவாத நடவடிக்கைகள் ஏற்பட்டால், முன்னதாக அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றுமாறும் இஸ்ரேலிய ஊடகங்கள் மற்றும் பாதுகாப்புத் துறையினரால் வழங்கப்படும் அறிவிப்புகள் குறித்து விழிப்புடன் செயற்படுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-8)

# போதைப்பொருள் சுற்றிவளைப்பில் 833 பேர் கைது!

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட "முழு நாடுமே ஒன்றாக" என்ற தேசிய செயற்பாட்டின் போதைப்பொருள் சுற்றிவளைப்பின் போது 816 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த போதைப்பொருள் சுற்றிவளைப்பின் போது 846 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது, 5 கிலோ 895 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும், 8 கிலோ 60 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 119 கிலோ 516 கிராம் கஞ்சா போதைப்பொருளும், 35846 கஞ்சா செடிகளும், 20 கிராம் குஷ் போதைப்பொருளும், 18 கிராம் ஹசீஸ் போதைப் பொருளும், 1102 போதை மாத்திரைகளும், 10 கிலோ 13 கிராம் 960 மில்லிகிராம் மதனமோதக மாத்திரைகளும், 2 கிலோ 238 கிராம் மாவா போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்களில் 12 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இங்கிலாந்தில் பிரமாண்ட தூதரகம் அமைக்க சீனா திட்டம்!

(லண்டன்)

இங்கிலாந்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க டவர் ஆஃப் லண்டன் பகுதிக்கு அருகில் சீனா தனது மிகப்பெரிய தூதரகத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்த பிரம்மாண்டமான கட்டடத்தின் அடியில் உள்ள ரகசிய நிலத்தடி அறைகள் மற்றும் நிதித் தரவுகளைக் கடத்தும் கேபிள்களுக்கு அருகில் இவை அமைந்திருப்பது பெரும் பாதுகாப்பு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.


சீன உளவுத்துறையின் ஊடுருவல் மற்றும் உளவு பார்க்கும் அபாயம் இருப்பதாக இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எச்சரித்தும், அந்நாட்டு அரசு இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க முன்வந்துள்ளது.

தேசிய பாதுகாப்பைப் பாதுகாக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் இந்தத் திட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அரசுத் தரப்பில் கூறப்படுகிறது.

இங்கிலாந்து மற்றும் சீன நாடுகளுக்கு இடையே ஏற்கனவே உளவு பார்த்தல் தொடர்பான பதற்றம் நீடிக்கும் சூழலில், இந்தத் தூதரக விவகாரம் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. (3)



## 'தோட்டாக்களின் குறி… ட்ரம்பிற்கு கொலை மி…



(டெஹ்ரா…
ஈரான்
ஆதரவு …
ஜனாதிபதி …
கொலை மிர…
ச்சையை ஏற்…

ஈரானில் அரசுக்கு எதிராக போராட்டம் தீவிரம் அடைந்துள்ள நிலையில், 3,500 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தின் பின்னணியில் அமெரிக்காவும், இஸ்ரேலும் இருப்பதாக ஈரான் ஆட்சியாளர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

அதற்கேற்றாற் போலவே, ட்ரம்பும் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகிறார்.

போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினால், அமெரிக்கா இராணுவ நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று ஈரானை எச்சரித்த அவர், அரச நிறுவனங்களை கைப்பற்றுமாறு போராட்டக்காரர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் தேவையான உதவிகள் உங்களை தேடி வரும் என்று போராட்டக்காரர்களுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் தைரியம் கொடுத்துள்ளார். அதுமட்டுமில்லாமல் ஈரான் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பாக அவர் ஆலோசித்து வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், ஈரான் அரச தொலைக்காட்சியில் அமெரிக்க

## 75 நாடுகளின் விசாக்களை முடக்கிய அமெரிக்க வெளியுறவுத்துறை!

(வோஷிங்டன்)

ஜனவரி 21 முதல் ஈரான், ரஷ்யா மற்றும் ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட 75 நாடுகளுக்கான குடியேற்ற விசா வழங்கும் நடைமுறைகளை அமெரிக்கா இடைநிறுத்தவுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை திணைக்களம் வெளியிட்டுள்ள குறிப்பாணையின்படி, ஜனவரி 21 முதல் 75 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு குடியேற்ற விசாக்கள் வழங்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் ஈரான், ஈராக், ரஷ்யா, ஆப்கானிஸ்தான், பிரேசில், எகிப்து மற்றும் நைஜீரியா உள்ளிட்ட முக்கிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

விசா விண்ணப்பதாரர்களைப் பரிசோதிக்கும் முறைகள் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை மறுஆய்வு செய்யும் வரை, தற்போதைய சட்டங்களின் கீழ் விசாக்களை நிராகரிக்குமாறு தூதரக அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சர்வதேச செய்தி நிறுவனங்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளன. இருப்பினும், இந்த இடைநிறுத்தம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது குறித்து மேலதிக விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை தற்போதைய தகவல்களின்படி, அமெரிக்கா விசா நடைமுறைகளை நிறுத்தி வைத்துள்ள 75 நாடுகளின் பட்டியலில் இலங்கை அதிகாரபூர்வமாக இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## தேர்தல் வாக்குறுதியை … 500 தெருநாய்களை பலியாக்… தெலுங்கானாவில் சம்ப…

(டில்லி)

தெலுங்கானா மாநிலத்தில் 500 இற்கும் மேற்பட்ட தெருநாய்கள் விஷம் வைத்து கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக 7 கிராமத் தலைவர்கள் உட்பட 15 பேர் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.

புத்தாண்டு தொடங்கிய முதல் இரண்டு வாரங்களிலேயே தெலுங்கானாவின் ஹனம்கொண்டா மற்றும் காமாரெட்டி மாவட்டங்களில் சுமார் 500 நாய்கள் விஷம் வைத்துக் கொல்லப்பட்டுள்ளன.

சமீபத்தில் நடந்த கிராம பஞ்சாயத்து தேர்தலின் போது, சில வேட்பாளர்கள் "நாய்கள் இல்லாத கிராமத்தை உருவாக்குவோம்" என்று வாக்குறுதி அளித்திருந்தனர்.

அந்த சர்ச்சைக்குரிய தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றவே இந்த நாய்கள் படுகொலை அரங்கேற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

நாய்களுக்கு வீரியம் மிக்க நச்சு ஊசி மூலம் விஷம் செலுத்தப்படும் காணொளிகள் வெளியாகிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## குறி இந்த முறை தப்பாது'

## ல மிரட்டல் விடுத்த ஈரான்!

(...ஹ்ரான்)

...ான் உள்நாட்டு போராட்டத்திற்கு ... தெரிவித்து வரும் அமெரிக்க ...பதி ட்ரம்புக்கு, அந்நாட்டு அரசு டிவி ...ல மிரட்டல் விடுத்திருப்பது பெரும் சர் ...ய ஏற்படுத்தியுள்ளது.

உத
பெரும்
நக்கு
காடுத்
ாமல்
துவது
சித்து
யாகி

அரச
ரிக்க

ஜனாதிபதி ட்ரம்புக்கு நேரடி கொலை மிரட்டல் விடுத்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 2024 ஆம் ஆண்டு பிரசாரக் கூட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ட்ரம்ப் காயமடைந்த படத்தை வெளியிட்ட ஈரான் அரச தொலைக்காட்சி, "இந்த முறை இலக்கை தோட்டாக்கள் தவற விடாது," எனக் குறிப்பிட்டுள்ளது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பான ஆதாரத்தை பகிர்ந்த இஸ்ரேல் - அமெரிக்க பத்திரிக்கையாளர் எமிலி ஸ்ரேடர், ஈரான் அரச தொலைக்காட்சி எல்லை கடந்து விட்டது.

கொலை முயற்சியின் போது குண்டு காயம் பட்ட ட்ரம்பின் படத்தை வெளியிட்டு, "இந்த முறை தோட்டாக்கள் தவறி விடாது," எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு நேரடி அச்சுறுத்தல், எனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ட்ரம்புக்கு கொலை மிரட்டல் விடுத்ததால் ஈரான் மீது அமெரிக்கா நிச்சயம் தாக்குதல் நடத்தும் என்ற அச்சம் எழுந்துள்ளது. (3)

## ஐ.நா அமைப்புக்களிலிருந்து

# விலகிய இஸ்ரேல்!



(ஜெருசலேம்)

அமெரிக்காவைத் தொடர்ந்து இஸ்ரேலும் ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அமைப்புகளிலிருந்து உடனடியாக விலகுவதாக அறிவித்துள்ளது.

அமெரிக்க நலன்களுக்கு எதிராகச் செயற்படுவதாக தெரிவித்து 31 ஐக்கிய நாடுகள் அமைப்புகள் உட்பட 66 சர்வதேச அமைப்புகளில் இருந்து விலகுவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சமீபத்தில் அறிவித்தார்.

இந்தநிலையில், மேற்காசிய நாடான இஸ்ரேலும், ஏழு ஐக்கிய நாடுகள் அமைப்புகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளது.

இந்த அமைப்புகள் தங்களுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் அதிகப்படியான அதிகார வரம்பு மற்றும் திறமையற்ற நிர்வாகத்தால் செயற்படுவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(3)

## ...யை நிறைவேற்ற

## ...ியாக்கிய பரிதாபம்

## ...சம்பவம்



ட்டு

த்து
கள்
தை
றுதி

தல்
வே
லை
தரி

ச்சு
டும்
கிப்

பதற்றத்தை ஏற்படுத்தின.

ஜெக்டியால் மாவட்டத்தின் தர்மபுரி பகுதியில், ஒரு நாய் ஊசி போடப்பட்ட ஒரு நிமிடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்த காட்சி அதில் பதிவாகியுள்ளது.

ஹனம்கொண்டா பகுதியில் மட்டும் 110 நாய்களின் உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டு பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

இந்த விவகாரத்தில் காவல்துறை தீவிர விசாரணை நடத்தி 15 பேர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


7 கிராமத் தலைவர்கள் நாய்களைக் கொல்ல அனுமதி அளித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தெருநாய்கள் கடித்தால் அரசு பாதிக்கப்பட்டவர்களுக்கு "கடுமையான இழப்பீடு" வழங்க வேண்டும்.

ஆனால், நாய்களைக் கொல்வது என்பது சட்டவிரோதமானது மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு தீர்வு என்று நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது. (3)

## பாலியில் படகு மூழ்கி விபத்து:

# 38 பேர் உயிரிழப்பு



(கிலிமாங்க்)

இந்தோனேஷியாவின் பாலி தீவில் படகு கடலில் மூழ்கியதில் 38 பேர் உயிரிழந்தனர். 23 பேர் உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டு உள்ளனர்.

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேசியாவில் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தீவுகள் உள்ளன. அங்கு படகு போக்குவரத்து தான் பிரதானம். ஆனால் விதிமுறைகளை பின்பற்றாததால் படகு விபத்துக்கள் தொடர் கதையாக உள்ளன.

அந்த வகையில் பாலி தீவு அருகே ஒரு படகு விபத்துக்குள்ளாகியது. வடக்கு மாலியில் உள்ள நைஜர் நதி நகரத்தில் படகு பாறையில் மோதி விபத்துக்குள்ளானது.

மீனவர்கள் மற்றும் கரையில் இருந்த மக்களின் உதவியுடன் மீட்புக்குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 38 பேர் உயிரிழந்தனர். 23 பேர் உயிருடன் மீட்கப்பட்டு உள்ளனர். இந்த படகு இரவு நேரத்திற்கு பிறகு நெல் அறுவடை செய்த குடும்பங்களையும் விவசாயிகளையும் ஏற்றிக்கொண்டு சென்ற போது விபத்து நிகழ்ந்து இருக்கிறது. இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகிறோம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.(3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களில் சிக்கி 82 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

**இந்த வருடத்தில் கடந்த 13 நாட்களில் இடம்பெற்ற 77 விபத்துக்களில் 82 பேர் உயிரிழந்துள்ளதாக போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.**

இவ்வாறு இடம்பெற்ற விபத்துகளில் பெரும்பாலானவை மதுபோதையில் வாகனம் செலுத்தியமையால் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆண்டின் முதல் 13 நாட்களில் மாத்திரம் 77 பாரிய வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன. இந்த விபத்துக்களின் விளைவாக மொத்தம் 82 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜனவரி முதலாம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்திற்காக சுமார் 7 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது மதுபோதையைப் பரிசோதிப்பதற்காக 75ஆயிரம் புதிய கருவிகள் விநியோகிக்கப்பட்டு, சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மதுவைத் தவிர ஏனைய போதைப் பொருட்களைப் பயன்படுத்தி வாகனம் செலுத்துபவர்களைக் கண்டறியும் முன்னோடித் திட்டம் தற்போது கொழும்பு பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1997- RC
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'5"
தகைமை/தொழில்-BSC, Senior QA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16428

பிறப்பு:1977- இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
உயரம்:6"
தகைமை/தொழில்-BSC, Engineer (Australia)
எதிர்பார்ப்பு-A/L,விவாகரத்தானவர்
தொ.இ: B/16430

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்-அனுசம்
7இல் செவ்
உயரம்:5'7"
தகைமை/தொழில்-A/L, Supervisor
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16431

பிறப்பு: 1997-இந்து
நட்சத்திரம்:பரணி
கி-பா: 45
உயரம்:5'4"
தகைமை/தொழில்-BSC,Engineer
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: B/16432

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்:-சித்திரை
2இல் செவ்
உயரம்:5'4"
தகைமை/தொழில்: Salesman
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16433

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி-பா: 16 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Engineer, Doctor
தொ.இ: G/16444

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
1இல் செவ்
கி-பா: 25
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC,MSC, Engineer (Canada)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16445

பிறப்பு: 1999-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BFA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16446

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்: பூரம்
கி-பா:11
உயரம்: 5'3"
தகைமை/தொழில் -BSC,MSC,QA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16450

பிறப்பு: 1994 -இந்து
நட்சத்திரம்: மகம்
கிபா: 26 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Diploma
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/16452

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 522

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# இல்லாத ஒன்று!

இருட்டு நேரம். ஒருத்தன் ஓடிப்போய் விளக்கைக் கொளுத்திக் கொண்டு வந்தான். என்ன செய்கின்றாய் என்று கேட்டார் ஒருத்தர். இருட்டை விரட்டிக்கொண்டிருக்கின்றேன் என்றான் அவன். இல்லாத ஒன்றை எப்படி விரட்ட முடியும்? என்றார் அவர்.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன சொல்கின்றீர்கள். இருட்டு என்பது இல்லாத ஒன்றா? என்று கேட்டான். இப்போது அவர் விளக்கம் கொடுத்தார். இருட்டு என்ற ஒன்று தனியாக இல்லை. வெளிச்சம் இல்லாத நிலைதான் அது. ஒரு இடத்திலே வெளிச்சமாக இருந்தால் வெளிச்சமாக இருக்குறது என்கின்றோம். அந்த இடத்திலே வெளிச்சம் இல்லை என்றால் இருட்டு என்கின்றோம். ஆக அந்த இடத்திலே இருக்கிறதும் இல்லாமப் போகிறதும் வெளிச்சம்தான். இருட்டு என்ற ஒன்று தனியாக ஓடிவந்து உடகார்ந்து கொள்வது இல்லை.

நாம் தான் விளையாட்டுத் தனமாக நினைக்கிறோம். இருட்டு என்ற ஒன்று ஏற்கனவே இருப்பதாகவும், வெளிச்சத்தைக் கண்டவுடனே அது ஓடிப்போகிறதாகவும் நினைத்துக்கொண்டிருக்றோம். இதிலே இருட்டை விரட்டுகின்றேன் என்று வீரவசனம் வேறு! வெளிச்சம் இல்லாமைதான் இருட்டு என்பதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். நம் மனதுக்குள்ளே "பயம்" என்று சொல்கின்றோம் பாருங்கள். அது அதுகூட "இருட்டு" மாதிரித்தானாம் என்று ஞானிகள் சொல்கின்றார்கள். வெளிச்சம் இல்லாமையை இருட்டு என்கின்றோமே அது மாதிரி அன்பு இல்லாமைதான் பயம் என்கின்றார்கள் அவர்கள்.

அன்பு இல்லாத ஒரு நிலைதான் பயம். அன்பு என்கின்ற விளக்கை அங்கே ஏற்றி வைத்துவிட்டால் பயம் என்கின்ற இருட்டு அங்கே இருக்காது. சுஃபி இலக்கியத்திலே ஒரு சம்பவம் வரும். முல்லா நஸ்ருதீனுக்கு காலையிலே கல்யாணம். அன்றைக்கு மாலையிலே அவரும் அவருடைய இளம் மனைவியும் உறவினர்களோடு ஆற்றைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

திடீர் என்று புயல் வெள்ளம் படகு இப்படியும் அப்படியும் ஆட ஆரம்பித்துவிட்டது. எல்லோருக்கும் பயம். முல்லா மட்டும் பயமில்லாமல் அவர்பாட்டுக்கு இருந்தார். "உங்களுக்குப் பயமாக இல்லையா?" என்று கேட்டார்அவர் மனைவி ரொம்ப ஆச்சரியமா! இதுக்கு முல்லா நஸ்ருதீன் பதில் சொல்லவில்லை. இடுப்பிலே இருந்த ஒரு கத்தியை எடுத்தார். மனைவியின் கழுத்துக்கு நேராக நீட்டினார். குத்தப்போகிறது மாதிரி ஓங்கினார். அந்த அம்மா முகத்திலே எந்தவிதச்சலனமுமில்லை!

இப்ப முல்லா கேட்டார் "கத்தி என்றால் உனக்குப் பயமாக இல்லையா?" என்றார். இதற்கு அவர். "கத்தி வேணும் என்றால் அபாயகரமானதாக இருக்கலாம்.ஆனால் அதைப் பிடித்திருப்பவர் என்மீது அளவுகடந்த அன்பு வைத்திருக்கிற என் கணவர். அதனாலே நான் பயப்படவில்லை என்றார்.

இப்போது முல்லா சொன்னார் அதே மாதிரித்தான் எனக்கும். இந்த அலைகள் வேணும் என்றால் ஆபத்தானதாக இருக்கலாம். ஆனால் இதை ஆட்டு வித்துக் கொண்டிருக்கிற அல்லாஹ் அன்பு மயமானவர். அதனாலே எனக்குப் பயம் இல்லை என்றார்.

அவருக்கு நம்பிக்கை இருந்தது. அதனால் அன்பு இருந்தது. நம்பிக்கை இல்லை என்றால் அன்பும் இருந்திருக்காது. அன்பு இல்லை என்றால் பயம் வந்திருக்கும். படகிலே இருந்த மற்றவர்கள் மாதிரி அவரும் பயந்து நடுங்கிக்கொண்டிருந்திருப்பார். இந்த உண்மையை நம் வாழ்க்கையிலேயும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

நமக்குப் பயம் ஏற்படுகின்றது என்றால் என்னஅர்த்தம்? நம்ம மேலேயே நமக்கு நம்பிகையில்லை என்று அர்த்தம். நான் கடவுளுக்குப் பயந்தவன் என்று சொல்கின்றார்கள் பாருங்கள். அது ரொம்ப அபத்தமானது என்கின்றார்கள் பெரியவங்கள எல்லாம். (சுவாமி சுகபோதானந்தா). அங்கே செலுத்த வேண்டியது, அன்பே தவிர பயம் இல்லை. நம்ம உபநிஷத்துக்கள் சொல்லுகின்ற மிகப் பெரிய விடயமே "பயம் இல்லாமல் இரு என்கின்றதுதான்" என்கின்றார் சுவாமி விவேகானந்தர்.

பயப்படுபவர்களுக்கெல்லாம் பெரியவர்கள் சொல்கின்ற அறிவுரை என்ன தெரியுமா? எதிர்காலத்தை பற்றித் திட்டமிடுங்கள். தவறில்லை. ஆனால் எதிர்காலத்திலே என்ன நடக்கும் என்கின்ற கற்பனைகளிலேயே பயந்துகொண்டிருக்காதீர்கள். அதனாலே உங்கள் மகிழ்ச்சிதான் பாழாகும்!

ஒருத்தர் டாக்டரிடம் வந்தார். டாக்டர்! பதினைந்து வருடத்துக்கு முன்னால் ஒரு தடவை உங்களிடம் வைத்தியத்துக்கு வந்தேன். காலிலே அடிப்பட்டு வந்தேன். காலிலே கட்டுப்போட்டு தண்ணீரிலே நனையாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்றீர்கள் என்றார். அதனாலே இப்போது என்ன? என்றார் அவர். இனிமேல் நான் குளிக்கலாமா? என்று கேட்பதற்காக வந்தேன் டாக்டர்! என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்நன்றி மறவாமை

ஒருவர் செய்த நன்றியை மறக்காமல் வைத்திருப்பது தமிழர் பண்பாடாகும். "நன்றி" என்னுஞ் சொல் நன்மையான செயலைக் குறித்து நிற்பது ஒருவர் எமக்கு நன்மை செய்யும் போது நாம் அவருக்கு நன்றி கூறுகிறோம்.

நினைக்காமல் திட்டமிடாமல் ஒருவர் செய்யும் நன்மையான செயற்பாடு போற்றுதற்குரியது. இந்தப் பரந்த வையகமும் வானகமும் கூட எதிர் நிற்க முடியாத ஒரு பெருங்குணம். இது மனித விழுமியப் பண்புகளிலே விதந்து பேசப்படுவது.

செய்நன்றி பயன் கருதாமல் செய்யப்பட வேண்டும். ஒருவருக்கு நன்மை செய்யும் போது அதனால் எனக்கு என்ன பயன் என எண்ணிச் செயற்படுவதே தற்போது பரவலாக உள்ளது.

அவ்வாறு பயன் வேண்டாது ஒருவர் துன்பப்படும் போது அத் துன்பத்தைப் போக்கச் செயற்பட வேண்டும் அந்த நன்மையினால் பெறும் பயன் அளவிலே கடலைக் காட்டிலும் மிகப் பெரியது.

அதனால் அத் தகையவர்களுடைய நெருக்கமான நட்பை என்றுமே மறவாதிருக்க வேண்டும்.

இன்று பலர் மற்றவருக்கு நன்மை செய்தால் அந்த நன்மை நமக்கு மீளக் கிடைக்குமா என ஐயப்படுகின்றனர். அவர்களுக்கு இயற்கை நல்ல தொரு விளக்கத்தைத் தந்து நிற்கிறது.



## வெள்ளி நற்சிந்தனை 22

தென்னங்கன்றை நாட்டி நீரூற்றி நாம் வளர்க்கிறோம். அது வளர்ந்து உரிய காலத்திலே நாம் தனக்கு நீருற்றிய நன்மையான செயற்பாட்டை மறவாமல் இனிய இளநீராக எமக்குத் தருகிறது.

இந்த இயற்கையான செயற் பாட்டை நாம் உற்று நோக்கினால் "செய்நன்றி மறவாமை" என்ற உயர்ந்த மனித விழுமியப் பண்பை மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

நன்றியை மறப்பது நன்று அன்று. ஒருவர் எமக்கு செய்த நன்மையான செயற்பாட்டை நாம் அடிக்கடி நினைவில் இருந்து மீட்டுப் பார்க்க வேண்டும்.

சிலர் நன்மையைப் பெற்றுக் கொண்டு நன்மை செய்தவர்களை உடனடியாக நினைவிலிருந்து அகற்றி விடுவார்கள்.

நன்மையான செயலைச் செய்தவரை மறக்கலாகாது. ஆனால் ஒருவர் எமக்குத் தீமையான செயற்பாட்டைச் செய்தால் அவரையும் அவர் செய்த செயற்பாட்டையும் நினைவில் இருந்து முற்றாக அகற்றி விட வேண்டும்.

அவர் செய்த தீமையான செயற்பாடு கொலை செய்தது போன்ற துன்பத்தைத் தருவதாக இருந்தால் எப்படி மறக்க முடி யும் எனப் பலர் எண்ணக் கூடும்.

அத்தகைய துன்பம் செய்தவர் அதற்கு முன்னே எமக்குச் செய்த நன்மையான செயற்பாடு ஒன்றை மீளநினைத்துப் பார்க்க வேண்டும்.

அப்போது எமது உள்ளம் அவர் இப்போது செய்த தீமை யான செயற் பாட்டை முற் றாகவே மற ந்து விடும். இத்தகைய ஒரு விழுமி யப் பண்பை வளர்ப்பதற்காகவே "செய்நன்றி மறவாமை" நம் முன்னோர்களால் வலியுறுத்தப் பட்டுள்ளது.

செய்நன்றி என்னும் உயர்ந்த கொடையை மறப்பவர்க்கு வாழ்க்கையிலே தீய செயற்பாடுகளிலிருந்து நம்மை என்றுமே விடுவிக்கும் ஆற்றல் கிட்டாது.

எனவே ஒருவர் தன்னைப் பண்படுத்தப் பிறர் தனக்குச் செய்த நன்மையான செயற்பாடுகளை மறக்காமல் மனதிலே பதித்து வைத்திருக்கவேண்டும் அவற்றை அடிக்கடி மீள நினைத்துப் பார்க்க வேண்டும்.

அவ்வாறு நினைப் தால் தாமும் பிறருக்கு ஏற்ற விடத்து நன்மை செய்ய வேண்டும் என்ற உணர்வு ஏற்படும்.

தினையளவு சிறிய நன்மையான செயற்பா டாக இருந்தாலும் அதனை பனை அளவாகக் கொண்டு வாழ்பவர் உளர்.

அவர்கள் நன்மையான செயற்பாட்டின் பயனை நன் குணர்ந்தவராவர். ஒரு வன் செய்த நன்மைக்கு நன்றிக் கடன் செலுத்த வேண்டும் என எண்ணு பவரும் பலர் உளர்.

அதனுடைய ஒரு வெளிப்பாடாகவே "நன்றி" சொல்லும் வழக்கம் இன்னும் நடைமுறையில் உள்ளது. இன்னும் நன்றி என்னும் சொல் ஒரு பண்பாட்டு நடைமுறையை விளக்கும் சொல்லாகச் சிறப்புப் பெற்றுள்ளது.

இன்றைய விரைவான வாழ்வியல் நடைமுறைகளிலே "செய்நன்றி' பற்றிய எண்ணம் அருகியுள்ளது. நன்றி சொல்லும் வழக்கம் செயற்கை நிலையிலே நடக்கிறது.

அந் நிலை மாற வேண்டும். பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற விருப்போடு வாழ்வியல் நடைமுறைகளைப் பேணிய எமது பண்பாட்டை மீளப் பதிவு செய்ய வேண்டும்.



முனைவர்
ச.மனோன்மணி

# இராசிபலன்

16.01.2026
தை 02, வெள்ளிக்கிழமை
திரயோதசி முன்னிரவு 11.29 மணிவரை
கேட்டை முற்பகல் 7.12 மணிவரை

சுபநேரம் 6.34-8.04 மணிவரை
இராகுகாலம் 11.04-12.34 மணிவரை
பிரதோச விரதம், மாட்டுப் பொங்கல்

சந்திராஷ்டமம்- ரோகிணி

வளவன்

**மேஷம்**: வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்**: குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், வெளியூர்ப் பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்**: நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**கடகம்**: பொதுநல ஈடுபாட்டால் ஆர்வம் கூடும், உறவினர் வருகையால் உற்சாகம் கூடும், பகையொன்று நட்பாகும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி**: குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றமுண்டு, கடன் சுமை குறையும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**துலாம்**: உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும்.

**விருச்சிகம்**: நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காணும் நாள், தொழில் வளர்ச்சி கூடும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் கூடும்.

**தனுசு**: சோம்பலை விலக்குவது நல்லது, சவால்களைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்**: வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், பயணங்களால் சோர்வுண்டு.

**கும்பம்**: எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தனவரவு அதிகரிக்கும் நாள்.

**மீனம்**: தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

நன்றாக நடத்தினாலும் தீயோர் தீமையே செய்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 956





சமையல் செய்வதற்கு வேண்டிய பண்டங்களையும் படகில் கொண்டு வந்தார்கள். நீராழி மண்டபப் படித்துறையை அடைந்ததும் தோழிப் பெண்கள் படகை விட்டிறங்கி மண்டபத்தில் சமையல் செய்யத் தொடங்கினார்கள்.

நந்தினியும் மணிமேகலையும் சிறிது நேரம் படித்துறையில் உட்கார்ந்து வம்பு பேசிக் கொண்டிருந்தார்கள். மணிமேகலை, இயற்கை மதியூகமுள்ள பெண். குறும்பில் பற்றுள்ளவள். அவள் பழு வேட்டரையர் பேசுவது போலவும் கரிகாலன், கந்தமாறன், பார்த்திபேந்திரன், வந்தியத் தேவன் ஆகியவர்கள் பேசுவது போலவும் நடித்துக் காட்டினாள்.

அதையெல்லாம் பார்த்தும் கேட்டும் நந்தினி கலீர், கலீர் என்று சிரித்துக் கொண்டிருந்தாள். ஆயினும் அவளுடைய கவனம் முழு வதும் மணிமேகலையிடம் இல்லை என்பதும், அவள் மனம் அவ்வப்போது ஏதோ அந்தரங்க சிந்தனையில் ஈடுபட்டது என் பதும் வெளியாகி வந்தது. திடீரென்று மணிமே கலை துள்ளிக் குதித்து எழுந்து நின்றாள்.

“அக்கா! வேட்டைக்கு நாம் போக வில்லை ஆனால் வேட்டை நம்மைத் தேடி வந்திருக்கி றது!” என்று கூவிக் கொண்டே இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்தாள்.

நந்தினியும் திடுக்கிட்டு எழுந்து மணிமேகலை பார்த்த திசையை நோக்கினாள். அங்கே சாய்ந்து படர்ந்திருந்த ஒரு பெரிய மரக் கிளையின் மீது சிறுத்தைப் புலி ஒன்று காணப்பட்டது! அந்தச் சிறுத்தை அவர்கள் மீது பாயலாமா, வேண்டாமா என்று யோசிப்பது போலப் பார்த்துக் கொண்டிருந்தது.

அதே சமயத்தில் சிறிது தூரத்தில் குதிரைகள் தண்ணீரில் இறங்கிப் பாய்ந்து வரும் சத்தமும் கேட்டது.

**41 ஆம் அத்தியாயம்**

**கரிகாலன் கொலை வெறி**

ஆதித்த கரிகாலன் தான் வேட்டையாடச் சென்று வெகு காலமாயிற்று என்றும், வில்வித்தையையே மறந்து போயிருக்கக் கூடும் என்று சொன்னான் அல்லவா? அன்று அவன் வீர நாராயண ஏரிக்கரைக் காட்டில் வேட்டையாடியதைப் பார்த்தவர்கள் அவ்விதம் எண்ணவில்லை.

அவனுடைய வில்லிலிருந்து கிளம்பிய அம்புகளுக்கு அன்று எத்தனையோ காட்டு மிருகங்கள் இரையாயின.


முய ல்களும், மான்களும், கரடி களும், சிறுத்தைகளும் செத்து விழுந்தன.

விலங்கு எதுவும் கண்ணில் படாத போது வானத்தில் பறந்த பற வைகள் மீது அவனுடைய அம்புகள் பாய்ந்தன. தொடரும்..



# சிறுவர் அரங்கம்

## உண்மையான கல்வி



ஒரு நகரத்தில் படிப்பில் ஆர்வம் மிக்க இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் பல துறைக் கல்வியையும் கற்று முடித்தான். அவனுக்கு மேலும் படிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் அவனுக்குக் கல்வி கற்றுத் தரத் தகுதியுடைய ஆசிரியர் யாரும் அந்நகரில் இல்லை.

அந்த நகரத்திற்கு வந்த ஒருவர் அவனிடம் “எங்கள் ஊரில் அறிவு நிரம்பிய பெரியவர் ஒருவர் இருக்கிறார். தன் முன்னோர்கள் செய்து வந்த கொல்லன் தொழிலையே அவரும் செய்து வருகிறார். அவரிடம் நீ சென்றால் நன்கு கற்றுத் திரும்பலாம்” என்றார்.

இதைக் கேட்ட அவன் அப்பெரியவரை நாடிப் புறப்பட்டான். நாற்பது நாட்கள் பயணத்திற்குப் பின் அவ்வூரை அடைந்தான். அப்பெரியவரின் கால்களில் விழுந்து வணங்கினான் அவன். தனக்குக் கல்வி கற்றுத் தருமாறு வேண்டினான்.

“கல்வி கற்பதற்காக வந்துள்ளாயா?” என்ற அவர் உலைத் துருத்தியை அவன் கையில் தந்து அதை இயக்குமாறு சொன்னார். அவனும்மறுமொழி பேசாமல் அதைச் செய்தான். அவரும் தம் கொல்லன் தொழிலைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தம்மிடம் வருபவரிடம் உரையாடினாரே தவிர இளைஞனிடம் ஏதும் பேசவில்லை.

இப்படியே இரண்டு ஆண்டுகள் கழிந்தன. பொறுமை இழந்த அவன், “ஐயா நான் கல்வி கற்பதற்காகத் தங்களிடம் வந்தேன்” என்று தொடங்கினான். பெரியவரின் மற்ற மாணவர்கள் அவனைவியப்புடன் பார்த்தனர்.

ஆனால் அவரோ “நான் சொன்னபடி துருத்தியை இயக்கிக் கொண்டிரு” என்றார் அவனும் அமைதியானான்.

அவரிடம் நாள்தோறும் கேள்விகள் வரும் தகுதி அற்றவையாக இருப்பின் நெருப்பில் போட்டுவிடுவார். தகுதி உள்ளவற்றைத் தலைப்பாகைக்குள் வைத்துக்கொள்வார். அவற்றிற்கு மாலையில் விடை தருவார்.

மேலும் இரண்டு ஆண்டுகள் கழிந்தன. ஒருநாள் அவனை அழைத்த அவர் “உன் கல்வி முடிந்து விட்டது. இனி நீ உன் ஊருக் குப் போகலாம்” என்றார்.

வியப்படைந்த அவன் “ஐயா எனக்குத் தாங்கள் எதுவுமே சொல்லித் தரவில்லையே” என்றான். அதற்கு அவர் “உலகத்தில் உள்ள அனைத்துக் கல்வியிலும் தலையாயது பொறுமைதான். அது உனக்கு வந்து விட்டது. இனி நீ கற்பதற்கு ஒன்றும் இல்லை” என்று அவனை அனுப்பி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பண்புகள் மனித குலத்தின் உயரிய சொத்தாகும். அதுவே நம் வாழ்வை ஜொலிக்கச் செய்கிறது.
- அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## பட்டிப் பொங்கல் அர்த்தமுடையதாகட்டும்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்ற உன்னதமான தத்துவத்தை நம் தமிழ் இனம் தவிர்ந்த வேறு எந்த இனத்திலும் காணுதல் அரிது.

ஆம், உழுதுண்டு வாழ்வதென்பது உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் வாழ வைப்பதாகும்.

இன்று உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் உணவை உண்டு வாழ்கின்றன எனில் அதற்கு மூலகாரணம் விவசாயி என்பது மறுக்கமுடியாத உண்மை.

அதனாலேயே நம் பாரதி உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என உரக்கப் பாடினான்.

ஆம், வேளாண் விவசாயம் உயிர்களை வாழவைப்பது. விவசாயிகள் சிந்துகின்ற வியர்வை மனித உயிர்களைக் காப்பாற்றுவது.

ஆக, இந்த உலகைப் பசியினின்றும் காப்பாற்றுகின்ற விவசாயி கடவுளின் பிரதிநிதியாகப் பார்க்கப்படுகின்றான். அதனாலேயே விவசாயி எனும் திரைப்படத்தில் ***கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி*** என எம்.ஜி.ஆரின் பாடல் அமையும்.

இங்கு பல்லுயிர் ஓம்பும் உணவை உற்பத்தி செய்கின்ற விவசாயி, இந்த உலகின் முதற்தர மானிடனாகப் போற்றப்பட வேண்டும்.

தவிர, தனது உடலை வருத்தி நிலத்தை உழுது பண்படுத்தி விவசாய உற்பத்திகளை விளைவிக்கின்ற தனது தொழிலுக்கு உறுதுணையாக இருந்த சூரியபகவானுக்கு தைத் திங்கள் முதலாம் நாளில் பொங்கிப் படைத்து தனது நன்றி அறிதலைத் தெரிவிக்கும் வேளாண் செய் விவசாயி, மறுநாள் பட்டிப் பொங்கலைச் செய்து தமக்கு உறுதுணையாக இருந்த பசுக்களுக்கும் எருதுகளுக்கும் தமது நன்றியைப் பகர்கின்றனர்.

ஆம், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பதன் முன்னடையாகிய உழவு என்பது எருதுகளை ஏரில் பூட்டி விளைநிலத்தை உழுது பண்படுத்தலைக் குறிப்பதாகும்.

இங்குதான் விவசாயச் செய்கையில் எருதுகளின் வகிபாகம் எத்துணை உயர்வானது என்பது உணர்தற்குரியது.

அதுபோல பாலைப் பொழிந்து தரும் பசுக்கள் விவசாயக் குடும்பத்தின் ஆரோக்கியம் உட்பட அனைத்துக் குடும்பங்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதுடன் பொருளாதார ரீதியிலும் துணை புரிகிறது.

எனினும் சமகாலத்தில் எங்கள் தமிழர் தாயகத்தில் அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணத்தில், மாடு வளர்ப்பு என்பது ஊக்குவிக்கப்படாமல் விடுபட்டிருப்பது வேதனைக்குரியது.

உண்மையில் பசுத்தீவு என்றழைக்கப்படுகின்ற நெடுந்தீவு தொடக்கம் தீவகம் ஈறாக வட மாகாணம் முழுமையிலும் மாடு வளர்ப்புத் திட்டம் நூறு வீத வெற்றியைத் தரக்கூடியது.

இருந்தும் மாடு வளர்ப்பு – அதற்கான ஊக்குவிப்பு – வழிகாட்டல் என்பன மிகவும் மந்தமாக இருப்பதால், மாடு வளர்ப்பு எங்கள் மத்தியில் அருகி வருகிறது.

எனவே இன்றைய பட்டிப்பொங்கல் அர்த்தமுடையதாக அமைவதற்கு மாடு வளர்ப்பை அதீதமாக ஊக்குவிக்க வேண்டும்.

### "பிரஜா சக்தி" திட்டத்தால் அதிருப்தி

## யாழில் ஜனாதிபதியின் நிகழ்வுகளை புறக்கணித்தது தமிழரசுக் கட்சி

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் "பிரஜா சக்தி" திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கலந்து கொள்ளும் நிகழ்வுகளை புறக்கணிக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

யாழ். வடமராட்சியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திற்கு இன்றைய தினம் (நேற்று) விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி பொங்கல் நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றார். அந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு இலங்கைத் தமிழரசு கட்சியினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதில்லை என எமது கட்சி முடிவெடுத்துள்ளது.இதற்கு பிரதான காரணம் "பிரஜா சக்தி" எனும் பெயரில் அரச இயந்திரங்களுக்கு சமாந்தரமாக தமது கட்சியை சார்ந்தவர்களை கொண்டு ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாம் பல எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளோம். உள்ளூராட்சி சபைகள் முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டங்களை திசை மாற்றிக்கொண்டுள்ளனர்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் தமக்கு உள்ளூராட்சி அதிகாரங்கள் கிடைக்காத இடங்களில் இத்தகைய செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

சட்டரீதியாக உள்ளூராட்சி சபைகள் முன்னெடுக்க வேண்டிய வேலைகளை வறுமை ஒழிப்பு எனும் பெயரில் நேரடியாக மத்திய அரசு செய்வதனை சட்ட ரீதியாக சவாலுக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

சுனாமி ஏற்பட்ட போது, வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து நிவாரணப் பணிகளை முன்னெடுக்க அன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க முயன்ற போது இதே ஜே.வி.பியினர் தான் உச்ச நீதிமன்றுக்கு சென்று அதற்கு எதிராக தடையுத்தரவை பெற்றனர்.

அதற்கு அவர்கள் நீதிமன்றில் முன்வைத்த வாதம், அரச அமைப்புக்கு சமாந்தரமாக எந்தவொரு அமைப்பையும் செயற்பட அனுமதிக்க முடியாது என்பதே.

இன்று அதே சட்ட அடிப்படையில் அவர்கள் அரசாங்க நிறுவனங்கள் , உள்ளூராட்சி சபைகள் ஊடாக சட்ட ரீதியாக செய்ய வேண்டியதை அதற்கு சமாந்தரமாக தமது கட்சிக்காரர்களை உள்ளடக்கிய அமைப்பை உருவாக்கி அதன் ஊடாக செய்ய முயல்கின்றனர்.

அரச உதவிகள், நிவாரணங்கள், நிதிகளில் தங்களின் கட்சியை வளர்க்கின்றனர். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அவர்கள் பாவித்த அதே சட்டக் கோட்பாட்டை உபயோகித்து அதனை நிறுத்த முயற்சி எடுப்போம் என்றார்.(ம-7)

## கல்விச் சீர்திருத்தங்கள் படுதோல்வி மக்கள் பணம் ரூ. 50 கோடி வீணடிப்பு

### முஜிபுர் ரஹ்மான் கடும் காட்டம்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் எவ்வித திட்டமிடலும் இன்றி முன்னெடுத்துள்ள கல்விச் சீர்திருத்த முயற்சி பாரிய தோல்வியடைந்துள்ளதாகவும் இதன் மூலம் சுமார் 50 கோடி ரூபாய் மக்கள் வரிப்பணம் வீணடிக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு எதுல் கோட்டையிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக வெள்ளை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்த போதிலும் அரசாங்கம் அதற்கு செவிசாய்க்கவில்லை.

வெளிப்படைத்தன்மையற்ற முறையில் தமக்கு நெருக்கமான அரசியல் தரப்பினரை மட்டும் இணைத்துக் கொண்டு இத்திட்டத்தைச் செயற்படுத்த அரசாங்கம் முயன்றது.

கல்வித்துறையில் நீண்டகால அனுபவமுள்ள நிபுணர்களைப் புறக்கணித்து ஒரு குறுகிய அரசியல் வட்டத்திற்குள் நின்றுகொண்டு எடுக்கப்பட்ட முடிவுகளே தற்போதைய தோல்விக்குக் காரணம்.

குறிப்பாக முன்மொழியப்பட்ட பாடத்திட்ட மறுசீரமைப்பானது ஒரு முழு ஆண்டுக்கானதாக அன்றி வெறும் மூன்று மாதங்களுக்கு மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கான வழிகாட்டி கையேடுகள் மற்றும் பயிற்சிகள் யாவும் மூன்று மாத காலப் பகுதிக்கே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் தவணைக்கான எந்தவொரு பாடக் கூறுகளும் (Modules) இதுவரை தயாரிக்கப்படவில்லை.

முறையான திட்டமிடல் இன்றி ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தினால் இறுதியில் நாட்டின் அப்பாவி மாணவர்களே அபாக்கியவான்களாக மாறியுள்ளனர்.

ஜனவரி மாதம் சீர்திருத்தங்களை ஆரம்பிப்பதாகக் கூறிய அரசாங்கம் அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மார்ச் மாதத்திலேயே வழங்குவதாகத் தீர்மானித்துள்ளது.

வசதிகள் இல்லாத நிலையில் மாணவர்கள் எவ்வாறு புதிய பாடத் திட்டத்தைக் கற்பார்கள். இந்தப் பிரச்சினை பின்தங்கிய பாடசாலை மாணவர்களைப் பாரதூரமாகப் பாதிக்கும்.

தோல்வியடைந்த இந்தத் திட்டத்திற்காக கல்வி அமைச்சு சுமார் 50 கோடி ரூபாயைச் செலவிட்டுள்ளது. மக்கள் வரிப்பணத்தில் வீணடிக்கப்பட்ட இந்தத் தொகைக்கு ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவை முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

இது தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய சமகி ஜன பலவேகய நடவடிக்கை எடுத்துள்ளது என்றார். (ம-7)

## பேசாலை கடலில் மூழ்கி இருவர் பலி; ஒருவர் மாயம்

மன்னார், பேசாலை கடற்பரப்பில் நேற்று நீராடச் சென்ற நான்கு இளைஞர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காணாமல் போயுள்ளர்.

குறித்த நான்கு இளைஞர்களும் கடலில் நீராடிக்கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கடல் அலையின் சீற்றத்தினால் நால்வரும் நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதனை அவதானித்த பிரதேச வாசிகள் அவர்களை மீட்பதற்கான துரித நடவடிக்கையில் ஈடுபட்டபோதும் இதில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இதேவேளை ஒருவர் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காணாமல் போனவரை மீட்க கடற்படையினரும் உள்ளூர் மீனவர்களும் இணைந்து தீவிர தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்பநிலையில் மாகாண சபைத் தேர்தல்கள் ஒரு பார்வை

03



கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அத்தகைய பிரிவிடுகையைச் செய்வதில், ஆணைக்குழு, பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்: -

(i) மாகாணத்திற்குள்ளான நிருவாக மாவட்டங்களின் பல்வேறு தேர்தல் தொகுதிகளில் வதிகின்ற ஆட்களின் எண்ணிக்கையிலான அளவொவ்வாமையை மிகக்குறைவானதாக் குவதன் விருப்புத் தன்மை அத்துடன்

(ii) தேர்தற்தொகுதிகளின் புவியியல்சார் மற்றும் பௌதீகச் சிறப்புக்கூறுகள்.

3. மேற்குறித்த 2இல் குறிப்பாக காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்பால் கவனம் செலுத்த ஏதேனு மொரு நிருவாக மாவட்டத்திற்கு ஓர் உறுப்பினரிலும் பார்க்க அதிகமான எண்ணிக்கையினர் தேர்ந் தெடுக்கப்பட வேண்டிய தேர்தல் தொகுதிகளை உருவாக்குதல் பொருத்தமென குழு கருதுகின்றவிடத்து, குழு பல் அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளையும் குறித் தொதுக்குதல் வேண்டும்.

4. நிருவாக மாவட்டமொன்றில் வேறுபிரிக்கப்படுகின்ற ஒவ்வொரு தேர்தல் தொகுதியையும் இனங் காண்பதற்காக அவையொவ்வொன்றிற்கும் இலக்கமொன்றையும் பெயரொன்றையும் குறித்தொதுக்கவும். அவ்வொவ்வொரு தேர்தல் தொகுதியிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரித்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதும் குழுவின் பொறுப்பாகும்.

5. குழுவினால் அதன் பொறுப்புக்கள் ஆற்றப்படுகையில் பின்பற்றப்பட வேண்டிய நடைபடிமுறையை தீர்மானிப்பதற்கும் பொறுப்புக்களை ஆற்றுகையில் தேவையான அலுவலர்கள், நிபுணர்கள், நுட்பக் குழுக்கள் மற்றும் உபகுழுக்களை நியமனம் செய்வதற்கும் குழுவிற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

5. குழு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 4 மாதத்திற்குள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கையை மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு கையளித்தல் வேண்டும்.

இவைதான் சட்டத்தில் கொடுக்கப்பட்ட அளவுகோல்களாகும்.

எல்லை நிர்ணயக் குழு ஏன் பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகளை உருவாக்கவில்லை

- பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி பற்றிய தெளிவான விளக்கம் (ஒரு வாக்குச் சீட்டா அல்லது இரு வாக்குச் சீட்டா போன்ற விளக்கங்கள்) இயற்றப்பட்ட சட்டத்தில் காணப்படவில்லை.

- சட்டத்தின் 16 உறுப்புரையின் அ பிரிவில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "ஒவ்வொரு நிருவாக மாவட்டமும் தெரிந்தனுப்புவதற்கு உரித்துடையதாகவுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை பின்வருவதனைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) அத்தகைய நிருவாக மாவட்டத்தினுள்ளான தேர்தற்றொகுதிகளின் எண்ணிக்கைக்குச் சமமாகவுள்ளவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள்

இப்பிரிவின்படி பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கமுடியாது.

நீங்கள் சட்டத்தைப் படித்துப் பார்த்தால் இன்னும் சில தெளிவின்மைச் சட்டத்தில் காண்பீர்கள். எம்மால் மட்டக்களப்பு, பொத்துவில், பேருவளை, கொழும்பு, ஹரிஸ்பத்துவ போன்ற இடங்களில் இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள் உருவாக்கியிருக்க முடியும். உருவாக்கப்படாமைக்கான காரணம் சட்டத்தில் இருந்த தெளிவின்மையும் ஒரு காரணமாகும்.

மேலும் மேற்கூறப்பட்ட சகல இடங்களிலும் ஒவ்வொரு இனங்களும் வெல்லக் கூடியதாக தனி அங்கத்தவர்கள் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக அவ்வாறு உருவாக்கப்பட்டதே மேற் கூறப்பட [illegible] தொகுதியாகும்.

சட்டத்திற்கு புறம்பாகவும் காரணங்கள் உண்டு. மற்றைய இடங்களில் இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்படா மைக்கு காரணம் என்ன வெனில், இரட்டை அங்கத் தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கப்படும் போது, கணிதமுறையில் பார்த்தால் ஒரு கட்சிக்கு அத்தொகுதியிலுள்ள சனத்தொகை/ வாக்காளர் எண்ணிக்கையில் குறைந்தது 34 சதவீத வாக் குகளைக் கொண்டிருந்தால் மட்டுமே அக் கட்சியிலிருந்து ஒருவர் தெரிவுசெய்யப்பட வாய்ப்புகள் உண்டு.

ஏனெனில் மிகுதி 66 சதவீதத்தில் அரைவாசி 33% எனவே அவ்வினத்திலிருந்து இருவர் தெரிவு செய்யப்பட மாட்டார்கள். இதேபோல் மூன்று அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கப்படும் போது, கணித முறையில் பார்த்தால் ஒரு கட்சிக்கு அத்தொகுதியிலுள்ள சனத்தொகை/வாக்காளர் எண்ணிக்கையில் குறைந்தது 26 சதவீத வாக்குகளைக் கொண்டிருந் தால் மட்டுமே அக் கட்சி யிலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட வாய்ப்புகள் உண்டு.

எமது குழுவின் எல்லை நிர்ணயத்தில் இவ்வாறான விகிதத்தைக் கொண்ட தொகுதிகள் இல்லாத காரணத்தினால் மற்றைய இடங்களில் பல் அங்கத்தவர்கள் தேர் தல் தொகுதி உருவாக் கப்படவில்லை.

**வாக்கின் சம பலத்தை பேணும் கட்டுப்பாடு எல்லை நிர்ணயக் குழு இருந்தது.**

2017ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் (திருத்தச்) சட்டம் 2017ஆம் ஆண்டு வரை இருந்த மாகாண சபைத் தேர்தல் முறையை மாற்றி கலப்புத் தேர்தல் முறையைக் கொண்டு வந்தது. இத் திருத்தச் சட் டத்தில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட 3 அ (1) மற்றும் 3 அ (11) ஆம் உட்பிரிவுகளில் குழுவுக்கான பணிப்பாணைகள் / சட்டவரம்புகள் உள்ளடங்கியுள்ளன.

அவற்றில் ஒன்று மாவட்டத்திற்குள் தேர்தல் தொகுதிகளிடையே பொது மக்களின் எண்ணிக்கையின் விகிதசம சமமின்மையை குறைந்த மட்டத்தில் பேணுதல்.

இதன் கருத்து மாவட்டத்திற்குள் வாக்கின் சம பலத்தை பேணுதல் ஆகும். அதாவது வாக்கின் மூலம் ஒரு மாகாண சபைக்கான அங்கத்தவர் களைத் தெரிவு செய்யும்போது ஒருவரால் அளிக்கப்படும் வாக்கும் மற்றவரால் அளிக்கப்படும் வாக்கும் சம பலத்தைக் கொண்டதாக இருத்தலே ஜனநாயகமாகும்.

(தொடரும்)

அட்டவணை A

| | 1 | 2 | 3 | | |
|---|---|---|---|---|---|
| | | தேவையான சனத்தொகை / உறுப்பினர் | இனரீதியான சனத் தொகை | | |
| மாவட்டம் | உறுப்பினர்கள் | | சிங்களம் % | தமிழ் % | முஸ்லீம் % |
| கொழும்பு | 20 | 5.0% | 76.5 | 11.1 | 10.7 |
| கம்பஹா | 20 | 5.0% | 90.5 | 3.9 | 4.2 |
| களுத்துறை | 11 | 9.1% | 86.8 | 3.8 | 9.3 |
| கண்டி | 15 | 6.7% | 74.4 | 11.2 | 13.9 |
| மாத்தளை | 6 | 16.7% | 80.8 | 9.8 | 9.2 |
| நுவரெலியா | 8 | 12.5% | 39.6 | 57.7 | 2.5 |
| காலி | 11 | 9.1% | 94.4 | 1.9 | 3.6 |
| மாத்தறை | 9 | 11.1% | 94.3 | 2.6 | 3.1 |
| அம்பாந்தோட்டை | 7 | 14.3% | 97.1 | 0.3 | 2.6 |
| யாழ்ப்பாணம் | 8 | 12.5% | 0.4 | 99.2 | 0.4 |
| கிளிநொச்சி | 2 | 50.0% | 1.2 | 98.2 | 0.6 |
| மன்னார் | 3 | 33.3% | 2.3 | 81.1 | 16.5 |
| வவுனியா | 3 | 33.3% | 10 | 83.1 | 6.8 |
| முல்லைத்தீவு | 3 | 33.3% | 9.7 | 88.3 | 2.1 |
| மட்டக்களப்பு | 6 | 16.7% | 1.3 | 72.7 | 25.4 |
| அம்பாறை | 7 | 14.3% | 38.9 | 17.4 | 43.4 |
| திருகோணமலை | 5 | 20.0% | 26.7 | 31 | 41.8 |
| குருநாகல் | 17 | 5.9% | 91.4 | 1.3 | 7.1 |
| புத்தளம் | 8 | 12.5% | 73.6 | 6.6 | 19.3 |
| அநுராதபுரம் | 11 | 9.1% | 91 | 0.6 | 8.2 |
| பொலன்னறுவை | 5 | 20.0% | 90.7 | 1.8 | 7.4 |
| பதுளை | 9 | 11.1% | 73 | 11.2 | 5.5 |
| மொனறாகலை | 7 | 14.3% | 94.9 | 2.9 | 2.1 |
| இரத்தினபுரி | 12 | 8.3% | 87.1 | 10.7 | 2.1 |
| கேகாலை | 9 | 11.1% | 85.5 | 7.3 | 7.1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்குற்ற...

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின்கீழ் இயங்கிவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக் கூறல் செயற்திட்டத்தினால் தயாரிக் கப்பட்டுவந்த இலங்கையில் மோதல் களின்போது இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான பொறுப் புக்கூறல் பற்றிய "நாங்கள் அனைத் தையும் இழந்துவிட்டோம் - நீதி கிட்டும் என்ற நம்பிக்கையைக்கூட இழந்துவிட்டோம்" எனும் தலைப்பி லான 30 பக்க விரிவான அறிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை (13) வெளி யிடப்பட்டது.

இவ்வறிக்கையில் யுத்தகால பாலி யல் வன்முறைகள் வேண்டுமென்றே பரந்துபட்ட ரீதியில் நிகழ்த்தப்பட்ட முறையாகக் கட்டமைக்கப்பட்ட வன் முறைகளின் ஓரங்கமாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன் அவற் றைப் போர்க்குற்றங்களாகவோ அல் லது மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களாகவோ கருதமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலக்கிடப்பட்ட தடைகள், குற்றவியல் விசாரணை கள், வழக்குத்தாக்கல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் பொறுப்புக் கூறலை உறுதிசெய்வதற்கான முயற்சிகளுக்கு சர்வதேச நாடுகளின் அரசாங்கங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இலங்கையில் இறுதிக்கட்ட யுத் தத்தின்போது படையினரால் தமிழ்ப் பெண்கள் வன்புணரப்பட்டமை குறித்து நீண்டகாலமாக அறிந்திருந் தாலும் இத்தகைய கட்டமைக்கப் பட்ட பாலியல் வன்முறைகள் அர சாங்கங்களினால் நீண்டகாலமாகப் புறந்தள்ளப்பட்டும் அவற்றுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்க இயலாமல் அக்குற்றங்கள் நியாயப் படுத்தப்பட்டும்வந்திருப்பதாக அவ்வறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறானதொரு பின் னணியில் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கான பொறுப்புக் கூறலை ஊக்குவிப்பதற்குரிய முயற்சி களை சர்வதேசப் பங்காளிகள் ஆரம் பிக்கவேண்டும்.

இலங்கையில் சர்வதேச சட்டங் களுக்கு எதிராக நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டு வதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் 2021 ஆம் ஆண்டில் இலங்கை தொடர் பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம் நிறுவப்பட்டது. இருப்பினும் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் 26 வருட காலமாக இடம் பெற்ற யுத்தத்தின்போது நிகழ்த்தப் பட்ட சர்வதேசக் குற்றங்கள் தொடர் பில் நம்பகமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் குற்றவாளி களைத் தண்டிப்பதற்கும் கடந்தகால அரசாங்கங்கள் தவறியிருக்கின்றன.

"நீதியை நிலைநாட்டுவோம்" என்ற வாக்குறுதியுடன் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் கடந்த 2024ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறியிருந்தாலும் தற் போதுவரை எவ்வித முன்னேற்றமும் அடையப்படவில்லை. இருப்பினும் இவ்வாறான மீறல்களால் பாதிக்கப் பட்டவர்கள் பல்வேறு மருத்துவப் பிரச்சினைகளுக்கும் சமூக ரீதியான தாக்கங்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை அரசாங்கமும் அதன் சர்வதேசப் பங்காளிகளும் இணைந்து பாதிக்கப்பட்டோருக்கு அவசியமான மருத்துவ உதவிகள், இடைக்கால நிவாரணம் உள்ளிட்ட உதவிகளை வழங்குவதற்கு ஏற்றவாறான உடனடி செயற்றிட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டும்.

சர்வதேச சட்டத்தின் பிரகாரம் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபி மானத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டோரைத் தண்டிக்கவேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத் துக்கு இருக்கிறது. அக்கடப்பாடு நிறைவேற்றப்படும் வரை பொறுப்புக் கூறலுக்கான அழுத்தத்தை மேலும் வலுவாகப் பிரயோகிப்பதற்குரிய நடவடிக்கைகளை சர்வதேச நாடு களின் அரசாங்கங்கள் முன்னெடுக்க வேண்டும் என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## நாவற்குழியில்...

மதிலுடன் மோதி விபத்துக்குள்ளான தில் இரு இளைஞர்கள் உயிரிழந் துள்ளனர்.

நேற்று (15) அதிகாலை 5.05 மணி யளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள் ளது.

இதில் கிளிநொச்சி, வட்டக்கச்சி யைச் சேர்ந்த ராஜீவன் விதுசன் (வயது-20) மற்றும் அச்சுவேலியைச் சேர்ந்த நாகராஜா ஜீவராஜ் (வயது-24) என்ற இருவரே உயிரிழந்தவர்களா வர்.

சட்டவிரோத மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனமே வேகக் கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகி யுள்ளது எனச் சாவகச்சேரிப் பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,30,33,104)

## வல்வை...

துறை உதயசூரி யன் கடற்கரை யில் நேற்று நடை பெற்றது.

குறித்த பட்டத் திருவிழாவில் முதலாமிடத்தை அச்சிலேட்டர் (தரையிலும் நீரி லும் வாழக்கூடிய உயிரினம்) பெற் றுக் கொண்டது.

வெற்றியாள ருக்கு ஒரு பவுண் தங்கச் சங்கிலி வழங்கப்பட்டது.

(ம-7)

## மன்...

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க சக்தித்துறையில் ஒரு முக்கிய மைல்கல்லாக, மன்னாரில் 50 மெகாவாட் "ஹேவிண்ட் வன் லிமிடெட் நிறு வனத்தின்" (HyWind One) காற்றாலை மின் திட்டத்துக்கு அடிக்கல் நாட் டும் நிகழ்வு ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தலை மையில் நேற்று வியாழக்கிழமை (15) மன்னார் கொன்னயன் குடி யிருப்பில் நடை பெற்றது.

ஹேலிஸ் பென்டன் (Hayleys Fentons) மற்றும் ஹேலிஸ் (The World of Hayleys) குழுமத் தின் அங்கமான ஹேவிண்ட் வன் லிமிட்டெட் நிறு வனம், இல ங்கை மின்சார சபையுடன் இணைந்து இந்தத் திட் டத்தை முன்னெடுத்துள்ளது.

மன்னார்ப் பகுதியில் முன்னெடுக் கப்படும் இந்த 50 மெகாவாட் காற் றாலை மின் திட்டமானது, நாட்டின் தேசிய மின் வழங்கலுக்கு தூய எரி சக்தியை சேர்ப்பதோடு, சூழலுக்கு உகந்த மின் உற்பத்தியை ஊக்குவிக் கும் ஒரு முன்னோடித் திட்டமாக அமையும் என எதிர்பார்க்கப்படு கிறது.

இந்தத் திட்டம் 18 மாதங்களுக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படு கின்றது. (ம-7,285)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2026.01.15
சீட்டிழுப்பு இலக்கம் 6075
U 8 3 2 9 0 1
அத சம்பத
U 2 9 0 1
சீட்டிழுப்பு இலக்கம் 0650

சுப தவசக்
திகதி 2026.01.15
101
மீனம் 19 32 62

தன நிதானய
திகதி - 2026.01.15
சீட்டிழுப்பு இலக்கம் - 2105
X 35 38 54 64 X

மெகா பவர்
திகதி 15/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2423
T 18 11 44 53 59

ஜய
திகதி 2026.01.15
சீட்டிழுப்பு இலக்கம் 0343
E 0 3 7 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4317
சீட்டிழுப்பு திகதி 15.01.2026
Z 04 15 36 68
Z

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.15
சீட்டிழுப்பு இலக்கம் 1384
மேடம் 32 38 51 52 மேடம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
15.01.2026 வெற்றி வாரம் 0783
ஆங்கில எழுத்து X
7 9 5 6 1 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,936,678.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3049
சீட்டிழுப்பு திகதி 2026.01.15 தினம் வியாழக்கிழமை
30 37 57 79 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.89,855,049.60

சனிதா
திகதி 15.01.2026 வெற்றி வாரம் 5210
04 08 13 39 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,775,480.40

சசிரி
879
15.01.2026 வியாழக்கிழமை
05 06 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,361,120.00


ராசி
சீட்டிழுப்பு வாரம் 4761
சீட்டிழுப்பு திகதி 15.01.2026 தினம் வியாழக்கிழமை
25 46 48 62 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,334,205.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 10 10 12 29 33
2225
15.01.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.620,761,089.40

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2875
சீட்டிழுப்பு திகதி: 2026.01.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,432,484.80
07 08 36 53 Q


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20.12.1936

மறைவு
06.02.2016

## அமரர் சங்கரம்பிள்ளை சோமசேகரம்பிள்ளை (சித்தப்பா)

காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் 231, திருநகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசேகரம்பிள்ளை அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பத்து வருடங்கள் பறந்தோடிப் போனதுவே!
நீளும் இரவுகளில் உங்களை நினைக்கையிலே
விழியோரம் கண்ணீரில் கரைகிறது உம் நினைவு
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்காதவை
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி!

231, திருநகர், கிளிநொச்சி. (6573) தகவல் - குடும்பத்தினர்

# தேநீர் விலை குறைப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவின் விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இன்று 16 ஆம் திகதி முதல் பால் தேநீரின் விலை 10 ரூபாவால் குறைக்கப்படும் என்று அகில இலங்கை சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று (16) முதல் இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவின் விலை குறைப்பு அறிவிக்கப்பட்டதை அடுத்து, இந்த விலை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. (ம-7)


## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு :
077 695 4530
(6572)

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village hotel & Indian Restaurant இற்கு சமையல் அனுபவம் உள்ள ஆண்/ பெண் தேவை.

தொடர்புகளுக்கு :
076 830 3931
(6564)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - அரியாலை ஆனந்தம் வடலி வீதியில் (AV வீதி) 3ஆம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 1½ பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- AV வீதி முகப்புடன்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4 Km
- ஒரு பரப்பின் விலை 60 இலட்சம்.
- A9 வீதியிலிருந்து 400m தூரம்.

தொடர்பு:-
076 860 2770, 076 987 8617
(1938)


# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 10 . 1962



மறைவு
13 . 01 . 2026

## சின்னத்துரை பரமேஸ்வரன்

### (ஓய்வு பெற்ற முகாமையாளர், சில்வா & கோ)

துன்னாலை வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் குருமன்காடு, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை பரமேஸ்வரன் அவர்கள் கடந்த 13.01.2026 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பகவதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - சத்தியபாமா தம்பதியினரின் மருமகனும் வத்சலாவின் அன்புக் கணவரும் யோகேஸ்வரி, மகேஸ்வரன், மகேஸ்வரி, விக்னேஸ்வரன், பரமேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரசோபன், பிரியந், பிரியங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் குகதர்ஷன், கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும் அக்ஷிதா, ஆதிரா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல 87, கோவில் வீதி, குருமன்காடு, வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை (16.01.2026) நடைபெற்று அன்னாரின் பூதவுடல் மதியம் 01.00 மணியளவில் தட்சநாதன்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குருமன்காடு, வவுனியா.

024 222 3840
070 629 6979

தகவல் : குடும்பத்தினர் (C-4823)

# மரண அறிவித்தல்



## இராமசாமி தியாகராஜா(ஸ்ரீ)

தெனியாயவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ ராம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி தியாகராஜா(ஸ்ரீ) அவர்கள் கடந்த (14.01.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி மற்றும் மாடத்தி தம்பதியினரின் அன்பு மகனும் வைத்திலிங்கம்(J.P) - அருமைமலர் தம்பதியினரின் பாசமிகு மருமகனும் புசாலினி(மக்கள் வங்கி, சங்கானைக் கிளை - பிரதி முகாமையாளர்) அவர்களின் பிரியமான கணவரும் சக்திவேல் விஜயலட்சுமி, இலட்சுமணன் நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரவீனா (பேராதனைப் பல்கலைக்கழக மாணவி), பிரசன்னா(லண்டன் பிறிஸ்ரல் பல்கலைக்கழக மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலநாதன் பிரசன்னா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், ஆளுநர் செயலகம் - வடமாகாணம்) அவர்களின் அன்பு மாமனாரும் ஜெயாலினி, ராகினி ஆகியோரின் மைத்துனனும் கர்ணன், விமல்ராஜ், சஜிகா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2026) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள கட்டையாலடி இந்து மயானத்திற்கு பி.ப 1.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீ ராம் லேன்,
இருபாலை றோட்,

மனைவி : 077 364 1051
மருமகன் : 077 833 3621

தகவல் : குடும்பத்தினர் (6571)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல 181, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org